# அத்தியாயம் 7

# குடித்தொகை, தொழிற்படை மற்றும் தொழில்நிலை

## 1. பொதுநோக்கு

2002ஆம் ஆண்டில் தொழிலாளர் சந்தை கலப்பான செயலாற்றத்தினைக் காட்டியது. 2001இன் எதிர்க்கணிய மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சியானது ஆண்டின் முதல் அரைக்காலப்பகுதியில் ஆரம்ப மொத்த தொழில்நிலை உருவாக்கத்தினை மோசமாகப் பாதித்ததோடு 2002இன் சாதகமான பொருளாதார வளர்ச்சியானது பின்னரைக் காலத்தில் பொருளாதார செயற்பாடுகளின் அதிகரிப்பினூடாக தொழில்வாய்ப்புக்களின் அதிகரிப்பிற்கு உதவியது. மேலும் 2002 பெப்புருவரியில் ஏற்படுத்தப்பட்ட யுத்த நிறுத்தத்தினை தொடர்ந்து நிலவிய பொருளாதாரத்தின் திருப்புமுனை மற்றும் சமாதான சூழல் என்பன எதிர்பார்க்கைகளுக்கு வழிவகுத்ததோடு அனைத்து பொருளாதார மற்றும் பொருளாதார நடவடிக்கைகளிலான பங்கேற்றலையும் தூண்டிவிடக் காரணமாகியது. இதன் பெறுபேறாக 2001இன் மூன்றாம் காலாண்டில் 48.4 சதவீதத்திலிருந்து 2002 இன் மூன்றாம் காலாண்டில் 49.4 சதவீதத்திற்கு அதிகரித்ததோடு வேலையற்றோர் வீதம் 2002இன் இரண்டாம் காலாண்டில் உச்சவீதமான 9.8 சதவீதத் திற்கு அதிகரித்து 2002இன் மூன்றாம் காலாண்டில் 9.1 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

வரைபடம் 7.1
தொழிற்படையின் போக்குகளும் தொழில்நிலையும் 1998 - 2002




தொழிலாளர் சந்தையின் நெகிழ்வுத் தன்மையை அதிகரிக்கும் நோக்கில் (சிறப்பு குறிப்பு 13இனைப் பார்க்கவும்) கொள்கை முக்கியத்துவத்தின் அடிப்படையில் தொழிலாளர் சந்தை மறுசீரமைப்பு குறித்து நான்கு பிரதான சட்டங்கள் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டன. இத்தொடரில் முதலாவதாக 1942ஆம் ஆண்டின் தொழிற்சாலைக் கட்டளைச் சட்டத்தின் கீழான பெண் ஊழியர்களின் மேலதிக நேர வேலை மறுசீரமைப்பாக மணித்தியாலங்களின் எண்ணிக்கை தளர்த்தப்பட்டது. 2003 சனவரியில் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட மற்றைய மூன்று சட்டங்களாவன, 1971ஆம் ஆண்டின் தொழிலாளர்களின் தொழில்நிலை முடிவுறுத்தப்படல் சட்டம், 1950ஆம் ஆண்டின் கைத்தொழில் பிணக்குகள் சட்டம், 1956ஆம் ஆண்டின் பெண் தொழிலாளர், இளவயதினர் மற்றும் பிள்ளைகளை தொழிலுக்கமர்த்தல் சட்டம் சட்டங்களின் திருத்தங்கள் என்பன மேற்கொள்ளப்பட்டன. திருத்தப்பட்ட தொழிலாளர்களின் தொழில்நிலை முடிவுறுத்தப்படல் சட்டத்தின் முக்கியமான விடயமானது வேலையிலிருந்து நிறுத்தப்பட்ட தொழிலாளர்களுக்கு இழப்பீடு வழங்குவது பற்றிய தெளிவான சூத்திரம் உருவாக்கப்பட்டமையாகும். கணிப்பு மற்றும் கைத்தொழில் பிணக்கு சட்டத்தின் திருத்தமானது பிணக்குகள் தீர்த்து வைக்கப்படுவதற்கு ஒதுக்கப்படுகின்ற கால அளவை வரையறுக்கின்றது. இறுதியாக பெண் தொழிலாளர், இளவயதினர் மற்றும் பிள்ளைகளை தொழிலுக்கமர்த்தும் சட்டத்தின் திருத்தங்களானது சட்டவிதிகளை மீறும் வேலை கொள்பவர்களுக்கு வழங்கப்படக்கூடிய தண்டணைகள் பற்றியதாகும்.

2002ஆம் ஆண்டில் அரசாங்க நிறுவனங்களின் உற்பத்தித் திறனை அதிகரிக்கும் நோக்குடன் அரச துறைகளில் ஆட்சேர்ப்பிற்கான காரணம் வலுவாக நிரூபிக்கப்பட்டாலன்றி அத்தகைய ஆட்சேர்ப்புக்களை நிறுத்துவதற்கு அரசாங்கம் கொள்கைத் தீர்மானமொன்றை எடுத்துள்ளது. தொழில்வாய்ப்பு வழங்கும் மூலமொன்றாக பொதுத் துறையின் பங்கு குறைந்து செல்லும் நிலையில் தனியார் துறை அதிக வேலைவாய்ப்புக்களை ஏற்படுத்த வேண்டுமென வேண்டப்படுகின்றது. இதனால் பொருளாதார நடவடிக்கைகளில் தனியார்துறை பங்குபற்றுதலின் மீதான தற்போதைய கட்டுப்பாடு அகற்றப்பட வேண்டுமென வலியுறுத்தப்படுகின்றது. மேலும் இக்கொள்கை பொதுத் துறையில் வேலைவாய்ப்பினை பெறவிரும்பும் தனியாட்களின் எதிர்பார்க்கைகளை மாற்றி இலங்கையில் தனியார் துறையினரால் இன்றும் எதிர்காலத்திலும் கேட்கப்படும் தேவையான தேர்ச்சிகளைப் பெற்றுக்கொள்ள ஊக்குவிக்கும்.

கல்வி கற்ற இளைஞர்களுக்கிடையில் காணப்படுகின்ற வேலைவாய்ப்பு அற்ற நிலைமையின் உயர் மட்டத்தினை போக்கி அவர்களை தனியார் துறையின் வாய்ப்புக்களுக்கு வழிகாட்டும் நோக்குடன் 2002ஆம் ஆண்டு காலத்தில் கொள்கை அபிவிருத்தி மற்றும் அமுலாக்கல் அமைச்சு மற்றும் தொழில் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சு என்பன பலவிதமான கொள்கை தீர்மானங்களை எடுத்தன. 18ற்கும் 28ற்கும் இடைப்பட்ட வயதினைக் கொண்ட இளைஞர்களுக்காக நன்கு திட்டமிடப்பட்ட மற்றும் தொழில் சார்ந்த பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களின் ஒன்றிணைந்த பொதியினைக் கொண்ட "இளைஞர் பட்டாளம்" என்ற அமைப்பை கொள்கை அபிவிருத்தி மற்றும் அமுலாக்கல் அமைச்சு ஆரம்பித்ததோடு இது 2003இல் தொடங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. உள்ளூர் தொழில் சந்தைக்கு மட்டுமல்லாமல் பன்னாட்டு தொழில்

சிறப்புக்குறிப்பு 13

# இலங்கையின் அண்மைக்கால தொழில் சந்தைச் சீர்திருத்தங்கள்

## அறிமுகம்

கடந்தகாலங்களில் பல நாடுகளில் தொழிலாளர் வர்க்கமானது நலிவுற்ற ஒன்றாக கருதப்பட்டு தொழில் தருநர்களின் "சுரண்டலுக்கு" உள்ளாக்கப்படக் கூடியதாக இருந்தது. கைத்தொழில் சுமுக நிலைமையில் பெருமளவு நேர்மையினை ஏற்படுத்தும் பொருட்டு தொழிலாளர்களை அத்தகைய சுரண்டல்களிலிருந்து பாதுகாக்கும் நோக்கில் இந்தநாடுகளின் அரசாங்கங்கள் பல சட்டங்களை இயற்றியுள்ளன. ஒரு புறத்தில் பிரபல்யம் பெறுவதற்காகவும் தொழிலாளர் வர்க்கத்தினை மகிழ்ச்சிப்படுத்துவதற்காகவும் வேண்டி சில சமயங்களில் நாட்டின் ஏனைய சமூக பங்காளிகளுக்கும் நாட்டுக்கும் முழுமையாகவுமே பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் தமது தேர்தல் தொகுதிகளில் குறிப்பிடத்தக்க அளவில் காணப்பட்ட தொழிலாளர் அரசில் தங்கியிருக்கும் கலாச்சாரத்தை அரசியல்வாதிகள் பயன்படுத்திக் கொண்டனர். மறுபுறத்தில் வாணிபங்கள் குடியேற்ற ஆட்சியாளர்களின் கையில் காணப்பட்டு தொழிலாளர் வர்க்கம் உள்நாட்டவர்களாகக் காணப்பட்ட குடியேற்ற ஆட்சிக்காலத்தில் ஏற்பட்ட நம்பிக்கையின்மையின் காரணமாக தொழில்தருநர் தொழிலாளர் ஆகிய இரு சமூக பங்காளர்களுக்கிடையேயான முரண்பாட்டு மனப்பாங்கு சுதந்திரம் பெற்றதிலிருந்து பல தசாப்தங்களாகத் தொடர்ந்து காணப்பட்டது. இது சம்பந்தப்பட்ட தொழிற்சங்க நடவடிக்கைகள் தொழில்தருநர் தொழிலாளர் உறவுமுறையை மேலும் நலிவடையச் செய்ததோடு தொழிலாளர் சந்தையின் சுமுகமான பணியாற்றலுக்கு இட்டுச் செல்லும் உறுதியான உறவு முறையொன்றுக்கு நகருவதற்கு தொழிலாளர்களையும் முகாமைத்துவத்தையும் தூண்டுவதற்கு அரசாங்கம் சிறிதளவே முயற்சி செய்தது. அல்லது முயற்சிக்கவே இல்லை. இலங்கையிலும் உண்மையில் இதே நிலைமையே காணப்படுகின்றது.

1977 ஆம் ஆண்டிலிருந்து பொருளாதாரக் கொள்கைகள் மாற்றமடைந்ததைத் தொடர்ந்து சிறந்த சந்தை சார்ந்த முறையொன்றுக்குப் பொருளாதாரம் நகர்ந்தபோதிலும் அண்மைக் காலம் வரையிலும் இலங்கையின் தொழில் சட்டங்கள் அடிப்படையில் கட்டுப்படுத்தப்பட்ட பொருளதாதாரம் நிலவிய 1977 காலப்பகுதியில் காணப்பட்டவையாகவே இருந்தன. இதே வேளையில் திறந்தசந்தைப் பொருளாதார மொன்றில் பொருளதாதார அபிவிருத்திக்கான முன்னோடி எனக் கருதப்படும் தனியார் துறையினர் இன்றைய வாணிப மற்றும் பொருளா தாரச் சூழலுக்கு அவை இசைவானதாக இல்லை என்பதனால் தொழிற்சட்டங்கள் மாற்றப்பட வேண்டும் என்ற உறுதியான நோக்கினைக் கொண்டிருந்தனர்.

தொழிற்சட்டங்களில் அவர்கள் எதிர்பார்க்கும் மாற்றங்கள் தொழிலாளிக்கு பாதகமாக அமைவதற்குப் பதிலாக தொழிலாளர் சந்தையின் சுமுகமான செயற்பாட்டின் ஊடாக தொழிலாளருக்கு நன்மை பயப்பனவாக அமைய வேண்டும் என்ற நோக்கினை தனியார்துறைத் தொழில் தருநர்கள் கொண்டிருந்தனர். உண்மையில் தொழிலாளர் சந்தையில் சுமுகமான தொழிற்பாடானது தொழில்தருநருக்கும் தொழிலாளிக்கும் இடையிலான உறவுமுறையை வலுப்படுத்தி முதலீட்டாளர்களுக்கு சிறந்தவாணிபச் சூழல் ஒன்றை உருவாக்குவதனால் நிலைத்து நிற்கக்கூடிய அதியுயர் பொருளாதார வளர்ச்சிக்கு இது முன்தேவையாக அமைகின்றது. அத்தகைய சந்தையானது தொழிலாளிக்கு பெருமளவு உற்பத்தித் திறனை ஏற்படுத்துவதற்கான சரியான ஊக்குவிப்புக்களை வழங்கி பயிற்சி மற்றும் இயலளவு அதிகரிப்பு என்பனவற்றின் ஊடாக தமது உற்பத்தித் திறனில் மேலும் மேம்பாடுகளை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைளை மேற்கொள்ளவும் வசதி செய்யும். இதற்குச் சமமான வேலையாளின் நலன்புரியினை உறுதி செய்கின்ற வேளையில் வாணிப சூழலில் ஏற்படும் மாற்றங்களுக்கு ஏற்பவும் தனிப்பட்ட தொழிலாளியின் செயலாற்றத்தின்படியும் தொழிலாளர்களை வேலைக்குச் சேர்ப்பதற்கும் அவர்களைத் தொழிலில் வைத்திருப்பதற்கும் அவர்களைத் தொழிலில் இருந்து அகற்றுவதற்கும் தொழில் தருநர்களுக்கு இயலுமாக இருத்தல் வேண்டும்.

நாட்டின் பொருளாதார வளர்ச்சியினை விரைவுபடுத்தி நிலைத்து நிற்கச் செய்வதற்கான நோக்கில் பொருளாதார மற்றும் சமூக மாற்றங்களின் ஊடாக உருவாகியுள்ள புதிய கேள்விகளின் நோக்கில் ஏற்கனவேயுள்ள தொழில் சட்டங்களை மீளாய்வு செய்வதற்கான உறுதியான நடவடிக்கைகளை 2002 ஆம் ஆண்டில் மேலாண்மையாளர்கள் மேற்கொண்டனர். தொழிலாளர் நிருவாகத்தில் காணப்பட்ட பாரிய அறைகூவல் என்னவெனில் தொழிலாளியின் உரிமைகளையும் நலன்புரியினையும் உறுதி செய்கின்ற வேளையில் பெருமளவு நெகிழ்ச்சியுடைய தொழிலாளர் சந்தைக்கு உகந்த சூழல் ஒன்றை உருவாக்குவதாகும்.

**ஏற்கனவேஉள்ள சட்டங்களில் காணப்படும் இணக்கமின்மைகள்:**

இலங்கை மத்திய வங்கியின் 2000 ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கையின்படி இன்று இலங்கையில் கிட்டத்தட்ட 50 தொழிலாளர் சட்டங்கள் காணப்படுவதோடு அவற்றில் பெரும் பாலானவை இலங்கையில் அரசதுறை ஆதிக்கம் செலுத்திய கட்டுப்பாட்டுப் பொருளாதாரம் நிலவிய காலப்பகுதியில் இயற்றப்பட்டவையாகும். தொழிலாளர் சந்தையில் பெருமளவில் இணக்கமின்மைகளை ஏற்படுத்திய சட்டங்களாவன 1971 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க வேலையாட்களின் தொழிலை முடிவுக்குக் கொண்டுவரும் சட்டம், 1950 ஆம்

## சிறப்புக்குறிப்பு 13 (தொடர்ச்சி)

ஆண்டின் கைத்தொழில் பிணக்குகள் சட்டம், 1942 ஆம் அண்டின் தொழிற்சாலை கட்டளைச் சட்டம், 1954 ஆம் ஆண்டின் சாப்பு மற்றும் அலுவலக தொழிலாளர் சட்டம், 1956 ஆம் ஆண்டின் பெண்கள், இளம் ஆட்கள், சிறு பிள்ளைகள் தொழில் சட்டம் என்பனவாகும். இவற்றில் நான்கு சட்டங்கள் 2002 ஆம் அண்டில் திருத்தப்பட்டன.

**அட்டவணை 1**

**2002 ஆம் ஆண்டில் திருத்தப்பட்ட சட்டங்கள்**

1. 1942 ஆம் ஆண்டின் தொழிற்சாலைக் கட்டளைச் சட்டம்.
2. 1971 ஆம் அண்டின் 45 ஆம் இலக்க வேலையாட்களின் தொழிலை முடிவுக்குக் கொண்டுவரும் சட்டம்.
3. 1950 ஆம் ஆண்டின் தொழில் பிணக்குகள் சட்டம்.
4. 1956 ஆம் ஆண்டின் பெண்கள், இளம் ஆட்கள் சிறுபிள்ளைகள் தொழிற்சட்டம்.

2002 ஆம் ஆண்டின் இறுதியளவில் திருத்தப்படுவதற்கு முன்பு வேலையாட்களின் தொழிலை முடிவுக்குக் கொண்டுவரும் சட்டமானது பொருளாதாரத்துக்குப் பெருமளவு தேவையாகக் காணப்பட்ட தொழிற்செறிவு முதலீட்டை ஊக்கமிழக்கச் செய்து தொழிலைப் பெற்றுக் கொண்டவர்களை பாதுகாத்தது. எனினும் எதிர்க்கணிய வேலை ஆசாரத்துக்குப் பங்களிப்புச் செய்தது. மேலும் அச்சட்டமானது பெருமளவு தடைகளைக் கொண்டதாகவும் நாட்டின் தற்போதைய அபிவிருத்தி உபாயத்துக்கு இசைவற்றது எனவும் கருதப்பட்டது. தொழில் ஆணையாளர் அல்லது சம்பந்தப்பட்ட தொழிலாளியினது முன்னரேயான எழுத்துமூலமான இசைவு இன்றி 15 அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்களைக் கொண்ட தனியார்துறை நிறுவனங்கள் ஒழுக்காற்று நடவடிக்கை அல்லாத காரணங்களுக்காக வேலையாட்களை வேலையிலிருந்து நீக்குவதைத் தடை செய்தது. பின்னையது தெளிவாகவே கவர்ச்சிகரமான இழப்பீட்டுப் பொதியொன்றை வேண்டி நின்றது. தொழிலாளர்களை வேலையிலிருந்து அகற்றுவதற்குத் தெளிவான இழப்பீட்டுப் பிரமாணங்கள் காணப்படாமையும் ஆணை யாளரின் தன்மதிப் பிரயோக அதிகாரம் சம்பந்தப்பட்ட வரைவிலக்கணமும் நிறுவனங்களை மீளமைப்பதற்கு மட்டுமன்றி தொழில் செறிவுக் கைத்தொழில்களுக்கு முதலீடுகளைக் கவருவதிலும் பெருமளவு தடையாக இருந்தன.

கூட்டு ஒப்பந்தங்ள், வேலைநிறுத்தம் போன்ற தொழிலாளர் உறவுமுறைகள் சம்பந்தமான ஒழுங்கு விதிகள் பலவற்றை உள்ளடக்கிய 1950 இன் கைத்தொழில் பிணக்குச் சட்டம் வேலை நிறுத்தநடவடிக்கை ஒன்றுக்கு முன்பதாக அறிவித்தல் வழங்கப்படவேண்டிய காலப்பகுதி தொடர்பாக தீர்மானம் மேற்கொள்வதற்கு தொழிலாளர்களுக்குச் சுதந்திரம் வழங்கியிருந்தது. 1950 இன் தொழிலாளர் பிணக்குகள் சட்டத்தின் கீழ் பிணக்குத் தீர்ப்பனவுச் செயல்முறைகள் நிறைவு செய்யப்படவேண்டிய உச்சகால எல்லை நிர்ணயிக்கப்பட்டிருக்கவில்லை. இது முதலீட்டாளர்களின் தீர்மானம் மேற்கொள்ளும் செயல்முறைக்கு பெரும் தடையாகக் காணப்பட்டது. மேலும் கூட்டு ஒப்பந்தங்களை மீறிய குற்றத்துக்காக தொழிற்சங்கங்களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளுவதற்கும் நிறுவனங்கள் அனுமதிக்கப் படவில்லை. இதன்படி, பெருமளவு வகைகூறலை வழங்குவதற்காக வேண்டி 1950 இன் தொழிலாளர் பிணக்குகள் சட்டத்தைத் திருத்த வேண்டிய உறுதியான தேவை காணப்பட்டது. தனியார் துறையினர் குறிப்பாக கூட்டு ஒப்பந்தங்களின் கடுமையான பிரயோகத்தினை மேலும் வலுப்படுத்த வேண்டுமெனக் குரல் எழுப்பினர்.

தொழிற்சாலைக் கட்டளைச் சட்டமும், சாப்பு மற்றும் அலுவலகத் தொழிலாளர் சட்டமும் பெண்களுக்கான மேலதிக நேர வேலையை கட்டுப்படுத்தின. ஆடைத்தொழிலின் தயாரிப்பாளர்கள் தேசிய தொழிற்சட்டங்களுக்கு கடுமையாக இணங்கிச் செல்லவேண்டுமென பல வெளிநாட்டுக் கொள்வனவாளர்கள் வலியுறுத்தியதன் காரணமாக குறிப்பாக தொழிற்சாலைக் கட்டளைச் சட்டத்துக்கு அவசரமான திருத்தங்கள் தேவைப்பட்டன' இதற்கு மேலதிகமாக பெண்கள், இளம் ஆட்கள் மற்றும் சிறு பிள்ளைகள் தொழில் சட்டம் பெண்களினதும் இளம் ஆட்களினதும் வேலை மணித்தியாலங்கள் மீது பல தடைகளை விதித்தன. பகல் நேரத்தில் வேலை செய்த யாரேனும் பெண்ணொருவர் இரவு 10.00 மணிக்குப் பின்னர் தொழிலில் ஈடுபடுத்தப்படுவதை தடைசெய்த இச்சட்டமானது தகவல் தொழில்நுட்ப உதவியுடனான பணிகளின் தடங்கலற்ற வழங்கலின் பாதகமான தாக்கத்தினை ஏற்படுத்தியது மட்டுமன்றி பெண்களுக்கும் இளம் ஆட்களுக்கும் கிடைக்கத் தக்கதாக இருந்த தொழில் வாய்ப்புக்களையும் கட்டுப்படுத்தியது.

### தொழிற்சட்டங்களுக்கான அண்மைக்கால திருத்தங்கள்

#### 1942 ஆம் ஆண்டின் தொழிற்சாலைக் கட்டளைச் சட்டம்

மேற்கொள்ளப்பட இருந்த தொடர்ச்சியான திருத்தங்களில் முதன்முதலாக இடம்பெற்ற திருத்தமாவது தொழிற்சாலைக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 68 தொடர்பான திருத்ததமாகும். பெண் ஊழியர்களுக்கான மேலதிக நேர வேலை மணித்தியாலங்களின் எண்ணிக்கையை ஆண்டொன்றுக்கு 100 மணித்தியாலங்ளுக்குக் கட்டுப்படுத்திய பிரிவு 68 இற்கான திருத்தமானது 2002 ஆம் அண்டு ஓகத்து 6ஆம் நாள் நாடாளுமன்றத்தில் நிறை வேற்றப்பட்டது. இந்தத் திருத்தம் மேலதிக நேர மட்டுப்படுத்தலை மாதமொன்றுக்கு 60 மணித்தியாலங்களுக்கு தளர்த்தியது. முன்னைய சட்டத்தின் கீழ்

## சிறப்புக்குறிப்பு 13 (தொடர்ச்சி)

ஆண்டொன்றுக்கு 100 மணித்தியால மட்டுப்படுத்தலை ஏற்கனவே மீறிய தொழில் தருநர்களுக்கு இந்தத் திருத்தம் இப்பொழுது சட்டப்பாதுகாப்பை வழங்கியதோடு குறிப்பாக ஆடைக் கைத்தொழிலில் கொள்வனவாளர்களின் நோக்கில் இது முற்தேவையொன்றாகக் காணப்பட்டது.

**1971 ஆம் அண்டின் தொழிலாளர்களின் வேலையை முடிவுக்குக் கொண்டுவரும் சட்டம்.**

2002 ஆம் ஆண்டின் இறுதியளவில் நாடாளு மன்றத்தில் நிறைவேற்றுதற்கு எதிர்பார்க்கப்பட்ட தொழிலாளர்களின் வேலையை முடிவுக்குக் கொண்டுவரும் சட்டம், மற்றும் 1950 இன் கைத்தொழில் பிணக்குகள் சட்டம் என்பனவற்றுக்கான திருத்தங்கள் எதிர்க் கட்சிகளினால் பிரேரிக்கப்பட்ட மாற்றங்களையும் ஒருங்கிணைத்து இறுதியில் 2003 ஆம் ஆண்டு சனவரி 7 ஆம் நாள் நாடாளு மன்றத்தில் நிறைவேற்றப்பட்டன.

தொழிலாளர்களின் வேலையை முடிவுக்குக் கொண்டுவரும் சட்டத்துக்கான திருத்தங்களின் முக்கிய விடயம் யாதெனில் ஆணையாளரின் தெளிவான இழப்பீட்டு சூத்திரமொன்றை நிர்மானித்தமையாகும். இது மிக விரைவில் வர்த்தமானியில் அறிவிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும் தொழல் முடிவுறுத்தப்படுவதை பொறுத்தமட்டில் ஆணையாளரினால் தீர்மானமொன்று எடுக்கப் படுவதற்கு முன்பாக ஊழியரொருவர் தமது கருத்துக்களை கூறுவதற்கு உரிமையளிக்கும் வகையில் இச்சட்டம் திருத்தப்பட்டது.

எனினும், வர்த்தமானியில் அறிவிக்கப் பட்ட சட்டமூலமானது சில சந்தர்ப்பங்களில் தொழிலாளி வேலையை தொடர்வதற்குப் பதிலாக இழப்பீட்டுக் கொடுப்பனவுக்கான புதிய கிளை வாசகம் ஒன்றினைக் கொண்டிருந்த போதிலும் பின்னர் நாடாளுமன்றத்தில் குழு நிலையின்போது இந்தகிளைவாசகம் நீக்கப்பட்டது.

**1950 ஆம் ஆண்டின் கைத்தொழில் பிணக்குகள் சட்டம்.**

1950 இன் கைத்தொழில் பிணக்குகள் சட்டத்துக்கான திருத்தங்கள் கைத்தொழில் பிணக்குகள் (திருத்த) சட்டம் மற்றும் கைத்தொழில் பிணக்குகள் விசாரணை மற்றும் சட்ட நடவடிக்கைகளின் தீர்மானச் (சிறப்புஏற்பாடுகள்) சட்டம் என்பனவற்றை உள்ளடக்கியுள்ளன.

**1. கைத்தொழில் பிணக்குகள் (திருத்த) சட்டம்**

பொதுவாக அனைத்துத் திருத்தங்களும் தொழில் தீர்ப்பு மன்றங்களுக்கும் நீதிமன்றங்களுக்கும் விண்ணப்பங்களை மேற்கொள்வதற்கு அனுமதிக்கப்பட்ட காலத்தைக் குறைப்பது தொடர்பாகவும் அதனைத் தொடர்ந்து வேலையாட்களின் பதிலிறுப்புக்கள் தொடர்பானதாகவும் காணப்பட்டன. குறித்துரைக்கப்பட்ட கால வரையறையானது சட்ட நடவடிக்கைகளுக்கும் அத்தகைய விண்ணப்பங்கள் மீதான இறுதித் தீர்மானத்தை மேற்கொள்ளுவதற்குமான காலத்தை ஆகக்குறைந்ததாக்குவதற்கானதாகும்.

**2. கைத்தொழில் பிணக்குகள் விசாரணை மற்றும் சட்ட நடவடிக்கைகளின் தீர்மானச் சட்டம்.**

தீர்க்கப்படாது ஒன்றுசேர்ந்துள்ள 16,000 தொழில் வழக்குகளின் தீர்ப்பனவுக்கான சட்டநடவடிக்கை களை விரைவுபடுத்துவதற்கு இந்தத் திருத்தம் நோக்கம் கொண்டிருந்தது. கைத்தொழில் பிணக்கு விசாரணை மற்றும் சட்ட நடவடிக்கைகளின் தீர்மான சட்டமூலம் தொழில் தீர்ப்பு மன்ற வழக்குகள் 4 மாதங்களில் முற்றுப்பெறவேண்டும் எனவும் நடுவர் தீர்ப்பு வழக்குகள் 2 மாதங்களில் முற்றுப்பெற வேண்டும் எனவும் ஆணையாளர் முன்னிலையில் கொண்டு வரப்படும் வேலையை முடிவுக்குக் கொண்டுவரும் விண்ணப்பங்கள் 1 மாதத்தில் செயல்முறைப் படுத்தப்பட வேண்டும் எனவும் பணிப்பினை ஏற்படுத்தியுள்ளது. முன்மொழியப்பட்ட இந்த சூத்திரம் 4-2-1 சூத்திரம் என அழைக்கப்படு கின்றது. எனினும் நாடாளுமன்றத்தில் குழுநிலையின் போது தொழில் தீர்ப்பு மன்ற வழக்குகளுக்கான 4 மாதகால ஒதுக்கீட்டுக்கான கிளைவாசகம் மாற்றமின் றியிருந்ததுடன் நடுவர் தீர்ப்புக்கான கிளைவாசகமும் விண்ணப்பங்களை செயல்முறைப் படுத்துவதற்கான கால ஒதுக்கீடும் முறையே 3 மற்றும் 2 மாதங்களுக்கு மாற்றப் பட்டன. இதனால் இந்த சூத்திரம் 4-3-2 என திருத்தியடைக்கப்பட்டது.

**1956 ஆம் ஆண்டின் பெண்கள், இளம் ஆட்கள் மற்றும் சிறு பிள்ளைகள் தொழில் சட்டம்**

திருத்தச்சட்டமூலம் ஏனைய சட்டமூலங்களுடன் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. எனினும் தொழிலாளர்களின் வேலையை முடிவுக்குக் கொண்டுவரும் சட்டமூலம் மற்றும் 1950 இன் கைத்தொழில் பிணக்குகள் சட்டமூலம் என்பன வற்றைப் போலன்றி அசல் சட்ட மூலத்துக்கு எதுவித மாற்றங்களும் இன்றி நாடாளுமன்றத்தினால் ஒரு மனதாக நிறைவேற்றப்பட்டது. திருத்தச்சட்ட மூலத்தின் பெரும்பாலும் அனைத்து 27 கிளைவாசகங்களும் சட்டத்தில் குறித்துரைக் கப்பட்ட விதிகளை மீறும் தொழில் தருநர்களுக்கான தண்டனைகளின் அதிகரிப்பினை உள்ளடக்கி யிருந்தமையே இதற்கான முதன்மைக் காரணமாகும்.

**முடிவுரைக் குறிப்புகள்**

தொழில் சீர்திருத்தங்கள் சம்பந்தப்பட்ட தனியார் துறையினரின் அனைத்து எதிர்ப்புக்களும் தொழில் சட்டங்களுக்கான திருத்தங்களின் மூலம் 2002 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்படாவிட்டாலும் பெருமளவு நெகிழ்ச்சித்தன்மை கொண்ட தொழில் சந்தைஒன்றுக்கு நகருவதற்கான கொள்கை நெறிப்படுத்தலை அரசாங்கம் தெளிவாகக் குறித்துக்காட்டியுள்ளது. நிறுவனங்களுக்கு தமது தொழிற்பாடுகளையும்

## சிறப்புக்குறிப்பு 13 (தொடர்ச்சி)

அமைப்பு முறையினையும் ஒழுங்குபடுத்திக் கொள்ளுவதற்குத் தேவையாக நெகிழ்ச்சித் தன்மையானது எதிர்பார்க்கப்படும் வர்த்தமான அறிவித்தல்களில் ஆணையாளரினால் இழப்பீட்டுப் பொதியின் சூத்திரம் வெளியிடப் படுவதனூடாக தொழிலாளரின் வேலையை முடிவுக்குக் கொண்டுவரும் சட்டத்துக்கான திருத்தங்களில் உள்ளடக்கப் பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக பிணக்கில் சம்பந்தப்பட்ட தரப்பினர் நிறுவனத்தில் தங்கியிருந்து வேலைகளை மேலும் குழப்புவதைத் தவிர்ப்பதற்காக வேண்டி 1950 இன் தொழிலாளர் பிணக்குச் சட்டத்துக்கான திருத்தங்கள் பிணக்குத் தீர்வுகளுக்காக எடுக்கப்படும் காலத்தைவிரைவுபடுத்தி ஆகக்குறைந்ததாக்கும். இதற்கு மேலதிகமாக தொழிற சாலைக் கட்டளைச் சட்டத்துக்கான திருத்தங்கள் பெண் தொழிலாளர் களுக்கான மேலதிக நேர மட்டுப்படுத்தல்களை நீடிப்பதன் மூலம் கட்டாயமாகவே ஆடைக் கைத்தொழிலுக்கு வசதி செய்து கொடுக்கும்.

மாறுபடும் தொழில் சந்தை கொள்கையின் பின்னணியில் இந்தசீர்திருத்தங்களில் இருந்து அதிகூடிய நன்மையினைப் பெற்றுக்கொள்ளு வதற்காக தொழில்தருநர் - ஊழியர் உறவுமுறை யினை வலுப்படுத்துவது அத்தியாவசியமாகும். எனவே ஊழியரின் நம்பிக்கையை அதிகரிக்கச் செய்வதும் தெளிவாக வரைவிலக்கணம் செய்யப்பட்ட இழப்பீட்டுப் பிரமாணம், அரசாங்கத்தினால் முன்மொழியப்பட்ட தொழில் வாய்ப்பற்றோருக்கான நன்மை அளித்தல் திட்டங்களை நிறுவுதல், தொழில் கொள்கைகளில் மேற்கொள்ளப்படும் மாற்றங்களினால் எதிர்பார்க்கப்படும் தாக்கங்கள் சம்பந்தமாக புரிந்துணர்வுக் கருத்தரங்குகளை ஒழுங்குபடுத்துதல் போன்றவற்றின் ஊடாக உறுதியான மனப்பாங்கு ஒன்றினை ஊக்குவிப்பதும் மிக அத்தியாவசியமாகும். இல்லாவிடில் நெகிழ்ச்சித்தன்மை கொண்ட தொழில் சந்தையொன்றை எய்துவது கனவொன்றாகவே காணப்படுவதுடன் ஒரு புறத்தில் தொழிலாளர்கள் தொழிற்சங்கங்களில் தங்கி யிருப்பதும் மறுபுறத்தில் அரசியல்வாதிகள் தொழிலாளர்களில் தங்கியிருக்கும் கலாச்சாரத்தைத் தொடருவதும் இலங்கையில் மிக உறுதியானதும் ஆக்கமும் கொண்ட தொழில்தருநர் ஊழியர் உறவுமுறைக்கான மாற்றமடையும் மனப்பாங்கினை ஏற்படுத்துவதற்கு சிறிதளவு நம்பிக்கையையே ஊட்டுகின்றன.

சந்தைக்கு ஏற்றவாறு கல்வி கற்ற இளைஞர் மற்றும் வேலையற்றோர் வேலையில் ஈடுபடுவதற்கு தனியார் துறையினரின் ஒத்தாசையுடன் பொருத்தமான பயிற்சிகளை வழங்குவதற்காக தொழில் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சு தேசிய வேலைவாய்ப்பு கொள்கை 2002 என்ற வரைவினை தயாரித்துள்ளது. மேலும் நாடு பூராகவும் உள்ள பயின்ற தொழிலற்ற இளைஞர்களுக்கு தொழில்வாய்ப்புக்களை இனங்கண்டு கொள்வதற்கு உதவி வழங்குவதற்காக தொழில் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சு உத்தேசிக்கப்பட்டுள்ள தொழில் பணி நிலையங்களை நாடு பூராகவும் நிறுவுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும் பட்டதாரிகளின் வேலையற்ற பிரச்சனையை குறைக்கும் பொருட்டு பட்டதாரி வேலைவாய்ப்பு நிகழ்ச்சித் திட்டமான "தருண அருண" முன்னரைக் காட்டிலும் அதி வேகமாக தொழிற்படுத்தப்படும்.

அதிகரித்த கேள்வி மற்றும் 2001ஆம் ஆண்டு யூலையில் விமானநிலையம் மீதான பயங்கரவாதத் தாக்குதலை தொடர்ந்து வெளிச்செல்லும் தொழிலாளர்களுக்கான விமான பறப்புக்களில் ஏற்பட்ட தாமதம் போன்ற தடங்கலற்ற நிலைமைகள் போன்ற காரணங்களினால் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2002இல் வெளிநாட்டு தொழில்வாய்ப்புக்கள் அதிகமாக இருந்தன. எவ்வாறாயினும் வெளிநாட்டு வேலைவாய்ப்பை எதிர்பார்க்கும் அனைத்து மனிதவலு வகைகளில் பணிப்பெண்களின் விகிதாசாரம் குறிப்பிடத்தக்களவு பணிப்பெண்களில் தொடர்ந்தும் தங்கியிருத்தலின் உயர்வினை குறிப்பிடுகின்றது. இந் நிலைமையை தவிர்க்கும் பொருட்டு வெளிநாட்டு வேலைவாய்ப்பில் அதிகளவான பன்முகப்பட்ட வளர்ச்சியை அடையும் நோக்கில் வீட்டுப் பணிப்பெண்களை மற்றைய பயிற்றப்பட்ட வேலைகளுக்கு வழிப்படுத்துவது மட்டுமல்லாமல் அவர்களை அதிக போட்டித் தன்மையுள்ளவர்களாக பயிற்றுவிக்கும் நோக்கில் 2002ஆம் ஆண்டு காலத்தில் தொழில் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சு இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்துடன் இணைந்து பல வகையான நடவடிக்கைகளை எடுத்தது. மேலும் தொழில் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சு 2002இல் அந்தந்த நாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்கள் மற்றும் வெளிநாடுகளில் தொழில் புரிவோர்களது நன்மைக்காக தொடர்புடைய நாடுகளுடன் இருபக்க உடன்படிக்கைகளை செய்வதில் தீவிரமாக ஈடுபட்டது.

### 7.2. குடித்தொகை

பதிவாளர் நாயகத் திணைக்களத்தின் படி மதிப்பிடப்பட்ட நடுவாண்டு குடித்தொகை 2002இல் 19 மில்லியனாக விளங்கி வீடமைப்பு 2001இன் குடித்தொகை பற்றிய தொகை மதிப்பினை (தொகை மதிப்பு 2001) விட நடுவாண்டு குடித்தொகை 1.5 சதவீதத்தினால் வளர்ச்சியுற்றமையை குறித்துக் காட்டியது. தொகை மதிப்பினை அடுத்துவரும் ஆண்டின் நடுவாண்டுக் குடித்தொகை குறித்த ஆண்டின் ஒவ்வொரு மாவட்டங்களிலுமுள்ள இயற்கை அதிகரிப்பு மற்றும் தேறிய குடியகல்வு என்பவற்றை பாவித்து நடுவாண்டின் எறிவு செய்யப்படுகிறது. 2001 தொகை மதிப்பில் 18 மாவட்டங்களில் மாத்திரம்

குடித்தொகையின் இறுதிக் கணக்கீடு முற்றாக கணக்கிடப்பட்டதோடு வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் எஞ்சியுள்ள 7 மாவட்டங்களிலும் குடித்தொகை, கிடைக்கக்கூடியதாகவுள்ள பகுதியளவான கணக்கீடுகளைப் பயன்படுத்தி மதிப்பிடப்படுகின்றன. 2001இன் தொகை மதிப்பீடு 18 மாவட்டங்களில் மாத்திரம் முற்றாக முடிக்கப்பட்டிருப்பதனால் 2002இல் அம்மாவட்டங்களில் மாத்திரம் நியம அளவுகளின் மூலம் பெறப்பட்ட தகவல்களின் மூலம் பதிவாளர் நாயகத் திணைக்களத்தின் நடுவாண்டு குடித்தொகை மதிப்பிடப்பட்டது. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் எஞ்சியிருந்த 7 மாவட்டங்களில் நடுவாண்டு குடித்தொகையை மதிப்பிடுவதற்காக 2001இன் தொகை மதிப்பினை அடியாண்டு மதிப்பீடாக பயன்படுத்தாமல் அக்குறிப்பிட்ட மாவட்டங்களின் அரசாங்க அதிபர்களிடமிருந்து பதிவாளர் நாயகத் திணைக்களத்தினால் பெற்றுக் கொள்ளப்பட்ட தகவல்கள் பயன்படுத்தப்பட்டன. 2002இல் இந்த 7 மாவட்டங்கள் சம்பந்தமாக பல்வேறு மூலங்களில் இருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட புள்ளி விபரங்களின் அடிப்படையில் முன்னைய ஆண்டின் மீது செய்யப்படும் மதிப்பீட்டு மாற்றங்கள் மீது அவதானம் செலுத்தல் வேண்டும்.

**அட்டவணை 7.1**
**மாவட்ட அடிப்படையில் குடித்தொகை**

'000 ஆட்கள்

| மாவட்டம் | 2001(அ) | 2002 | மாற்றம் | % மாற்றம் |
|---|---|---|---|---|
| கொழும்பு | 2234 | 2266 | 32 | 1.4 |
| கம்பகா | 2066 | 2077 | 11 | 0.5 |
| களுத்துறை | 1061 | 1069 | 8 | 0.8 |
| காலி | 991 | 1000 | 10 | 1.0 |
| மாத்தறை | 761 | 770 | 9 | 1.2 |
| அம்பாந்தோட்டை | 525 | 529 | 4 | 0.7 |
| பதுளை | 775 | 787 | 12 | 1.6 |
| மொனராகல | 396 | 401 | 5 | 1.2 |
| கண்டி | 1273 | 1288 | 16 | 1.2 |
| மாத்தளை | 442 | 448 | 6 | 1.3 |
| நுவரெலியா | 700 | 707 | 7 | 1.0 |
| கேகாலை | 780 | 784 | 4 | 0.5 |
| இரத்தினபுரி | 1008 | 1020 | 12 | 1.2 |
| குருநாகல் | 1452 | 1461 | 9 | 0.6 |
| புத்தளம் | 705 | 713 | 8 | 1.1 |
| அநுராதபுரம் | 747 | 754 | 8 | 1.0 |
| பொலனறுவை | 359 | 363 | 4 | 1.1 |
| அம்பாறை | 589 | 596 | 7 | 1.1 |
| மட்டக்களப்பு | 486 | 522(ஆ) | 36 | 7.3 |
| திருகோணமலை | 340 | 358(ஆ) | 18 | 5.2 |
| யாழ்ப்பாணம் | 491 | 532(ஆ) | 41 | 8.4 |
| கிளிநொச்சி | 127 | 154(ஆ) | 27 | 21.0 |
| மன்னார் | 152 | 98(ஆ) | -54 | -35.4 |
| முல்லைத்தீவு | 122 | 164(ஆ) | 42 | 34.8 |
| வவுனியா | 150 | 146(ஆ) | -4 | -2.5 |
| மொத்தம் | 18,732 | 19,007 | 275 | 1.5 |

மூலம்: பதிப்பாளர் நாயகத் திணைக்களம்.

(அ) 2001இன் குடித்தொகை மதிப்பீடு மற்றும் வீடமைப்பை அடிப்படையாகக் கொண்டது.

(ஆ) 2002ஆம் ஆண்டின் புள்ளி விபரங்கள் மாவட்டத்தின் அரசாங்க அதிபரிடமிருந்து பதிவாளர் நாயகத்தினால் பெறப்பட்டது. ஏனைய மாவட்டங்களுக்கான மதிப்பீடுகள் குடித்தொகையில் ஏற்படும் இயற்கையான அதிகரிப்பையும் ஒவ்வொரு மாவட்டத்திற்குமான 2002இன் தேறிய குடிபெயர்ந்தோரின் புள்ளி விபரங்களையும் பயன்படுத்தி எறிவு செய்யப்பட்ட குடித்தொகை 2001 எண்தொகைகளின் மூலம் கணிக்கப்பட்டுள்ளது.

எனினும் அரசாங்கத்திற்கும், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட யுத்த நிறுத்த உடன்படிக்கைக்கு முன்பு நிலவிய நிலைமையுடன் ஒப்பிடுகையில் சாதகமான சமாதான நிலமைகளின் காரணமாக அம்மாவட்டங்களில் குறிப்பிடத்தக்க உள்ளக குடியகல்வுக்கு காரணமாயின. அண்டை நாடுகளுக்கும், மாகாணங்களுக்கும் சென்றிருந்த அகதிகள் திரும்பியிருப்பார்கள். இது ஒரு புறத்தில் 2001 மற்றும் 2002 காலப்பகுதிகளில் வடமாகாணத்தின் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களிலும் கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு, திருகோணமலை போன்ற மாவட்டங்களிலும் குறிப்பிடத்தக்க குடித்தொகை அதிகரிப்பும் மறுபுறத்தில் வடக்கில் மன்னார் மற்றும் வவுனியா மாவட்டங்களில் குறிப்பிடும்படியான குடித்தொகை வீழ்ச்சியும் ஏற்பட்டதை ஓரளவுக்கு விபரிக்கின்றது.

மத்திய வங்கியின் ஆண்டறிக்கையின் கடந்த ஆண்டின் வெளியீட்டிலிருந்து தொடர்ச்சியாக கருத்துத் தெரிவிக்கப்படுகின்ற இலங்கையின் வயது முதிர்ந்த குடித்தொகையானது, நாட்டின் நீண்டகால பொருளாதார அபிவிருத்தியினை கட்டுப்படுத்தக்கூடிய மேலதிக காரணியாக அமைந்து இது முக்கியமானதொரு குடித்தொகை காரணியாகவும் தொடர்கின்றது. மத்திய வங்கியின் முன்னைய ஆண்டறிக்கையில், 2001 தொகைமதிப்பின் வயது பகிர்ந்தளிப்பின் மீதான ஆரம்ப மதிப்பீடுகள் குறித்துக் காட்டப்பட்டுள்ளதோடு எதிர்காலச் சிக்கல்கள் பற்றி அதில் குறிப்பிட்டுள்ள சிக்கல்கள் தொடர்ந்தும் கொள்கை வகுப்பாளர்களின் அதி முக்கிய அவதானிப்பை வேண்டுகின்றது. 2002 ஆம் ஆண்டிற்கான தற்காலிக மதிப்பீடுகள் 15 ஆண்டுகளுக்குக் கீழ்ப்பட்ட வயதுக் குடித்தொகை இக்காலப்பகுதியில் 25 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தவிடத்து 54 வயதிற்கு மேற்பட்டவர்களின் குடித்தொகை 14 சதவீதத்திற்கு உயர்வடைந்தது.

## 7.3. தொழிற்படை

10 வயதினையும் அதற்கு மேற்பட்ட வயதினையுமுடைய வேலை செய்யக்கூடிய மற்றும் வேலை செய்ய ஆர்வம் கொண்ட ஆட்களைக் கொண்டது என வரைவிலக்கணம் செய்யப்பட்ட தொழிற்படை 2001ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டின் 6.73 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2002ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் 7.05 மில்லியனுக்கு அதிகரித்தது. 2002ஆம் ஆண்டு காலப்பகுதியில் பொருளாதாரத்தின் மீட்சியின் மீதான சாதகமான எதிர்பார்க்கைகளினால் இது வேலை செய்வதில் உள்ள ஆர்வத்தை அதிகரித்துள்ளது என்பதை குறிப்பிடுகின்றது. தொழிற்படையிலான 320,000 ஆட்களாகவும் இதில் தொழிலுள்ளோரின் எண்ணிக்கை 207,000 ஆகவும் தொழிலற்றோரின் எண்ணிக்கை 113,000 ஆகவும் காணப்பட்டது. 2002இன் இரண்டாம் காலாண்டில் வேளாண்மை மற்றும் பணித்துறை தொழில்நிலையில் ஏற்பட்ட அதிகரிப்பினால் அக்காலாண்டில் தொழிற்படை உச்சளவான 7.30 மில்லியனுக்கு உயர்ந்தது.

தொழிற்படை பங்கேற்பு வீதம் அதாவது 10இனையும் அதற்கு மேற்பட்ட வயதினையும் கொண்ட குடியிருப்பாளர் குடித்தொகைக்கான தொழிற்படையின் விகிதம் 2001இன் மூன்றாம் காலாண்டின் 48.3 சதவீதத்திலிருந்து 2002இன் மூன்றாம் காலாண்டில்

## அட்டவணை 7.2
## தொழிற்படை பங்கேற்பு

| காலம் | குடும்ப அலகுகளின் குடித்தொகை (அ)('000 ஆட்கள்) | தொழிற்படை ('000 ஆட்கள்) | தொழிலில் உள்ளோர் ('000 ஆட்கள்) | தொழில் அற்றோர் ('000 ஆட்கள்) | தொழிற் படை பங்கேற்பு வீதம் (%)(ஆ) | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | ஆண் | பெண் | அனைவரும் |
| *1993* | 12,278 | 6,032 | 5,201 | 831 | 65.3 | 33.1 | 49.1 |
| *1994* | 12,493 | 6,079 | 5,281 | 798 | 65.4 | 32.0 | 48.7 |
| *1995* | 12,736 | 6,106 | 5,357 | 749 | 64.4 | 31.7 | 47.9 |
| *1996* | 12,831 | 6,242 | 5,537 | 705 | 65.9 | 31.6 | 48.6 |
| *1997* | 12,871 | 6,266 | 5,608 | 658 | 65.7 | 32.0 | 48.7 |
| *1998* | 12,882 | 6,660 | 6,049 | 611 | 67.3 | 36.4 | 51.7 |
| *1999* | 13,169 | 6,673 | 6,082 | 591 | 67.7 | 74.1 | 50.7 |
| *2000* | 13,572 | 6,827 | 6,310 | 517 | 67.2 | 33.9 | 50.3 |
| *2001* | 13,570 | 6,773 | 6,236 | 537 | 66.3 (இ) | 31.9(இ) | 48.8 |
| *1ஆம்காலாண்டு* | 13,676 | 6,731 | 6,212 | 518 | 68.8 | 31.9 | 49.2 |
| *2ஆம்காலாண்டு (ஈ)* | வி.கி | வி.கி | வி.கி | வி.கி | வி.கி | வி.கி | வி.கி |
| *3ஆம்காலாண்டு* | 13,926 | 6,730 | 6,202 | 528 | 66.0 | 31.5 | 48.3 |
| *4ஆம்காலாண்டு* | 14,010 | 6,858 | 6,292 | 566 | 66.0 | 32.4 | 49.0 |
| *2002(இ)* | 14,178 | 7,121 | 6,467 | 654 | 67.6 | 33.5 | 50.2 |
| *1ஆம்காலாண்டு* | 14,103 | 7,296 | 6,663 | 633 | 67.9 | 35.9 | 51.7 |
| *2ஆம்காலாண்டு* | 14,164 | 7,017 | 6,330 | 688 | 67.2 | 32.5 | 49.5 |
| *3ஆம்காலாண்டு* | 14,267 | 7,050 | 6,409 | 641 | 67.8 | 32.0 | 49.4 |

*(அ) பத்து வயதும் அதற்கு மேற்பட்ட குடும்ப அலகுகளின் குடித்தொகை.*
*(ஆ) குடும்ப அலகுகளின் குடித்தொகையில் தொழிற்படையின் வீதம்.*
*(இ) மூன்று காலாண்டுகளின் சராசரி*
*(ஈ) 2001 ஆம் ஆண்டு 2 ஆம் காலாண்டுக்கான தொழிற்படை அளவீடு குடிமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் நடத்தப்படவில்லை.*

*மூலம்: குடிமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்.*

*49.4 சதவீதத்திற்கு உயர்ந்தது. இதற்கு எதிரிடையாக 2000ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டிலிருந்து 2001ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டு வரையான காலப்பகுதியில் ஆண் மற்றும் பெண் தொழிற்படை பங்கேற்பு வீதம் இரண்டும் குறைவடைந்துள்ளதோடு 2001இன் மூன்றாம் காலாண்டுக் காலத்தில் 66.0 சதவீதம் மற்றும் 31.5 சதவீதமாகவும் இருந்த ஆண் மற்றும் பெண் தொழிற்படை பங்கேற்பு வீதம் 2002இன் மூன்றாம் காலாண்டில் முறையே 67.8 சதவீதம் மற்றும் 32.0 சதவீதமாக உயர்வடைந்தது. எவ்வாறாயினும் 2000 மற்றும் 2001 ஆண்டு காலத்தில் ஆண் பங்கேற்பு வீதத்தை விட மிகக் கூர்மையாக வீழ்ச்சியடைந்த பெண் பங்கேற்பு வீதம் 2001இலிருந்து 2002 காலப்பகுதியில் ஆண் பங்கேற்பு வீதத்தை விட சிறியளவில் உயர்ந்தது.*

### 7.4. தொழில் நிலை

தொகை மதிப்பு புள்ளிவிபரவியல் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட காலாண்டு தொழிற்படை அளவீட்டின் படி தற்பொழுது தொழில் புரியும் ஒருவர் என்பது கொடுப்பனவிற்காக, இலாபத்திற்காக அல்லது குடும்பத்தின் நன்மைக்காக கொடுப்பனவின்றி தரவு சேகரிக்கப்படுவதற்கு முன்பாக ஒரு கிழமையில் ஒரு மணித்தியாலம் அல்லது அதற்கு மேல் பணியில் ஈடுபட்டவர் என வரைவிலக்கணம் செய்யப்படுகின்றது. நோய், மோசமான வானிலை மற்றும் தொழில் தகராறு போன்ற காரணங்களின் காரணமாக தற்காலிகமாக தொழிலின்றி இருக்கும் ஒருவரும் தொழிலிலிருப்பவராகவே கருதப்படுகின்றது. காலாண்டு

## அட்டவணை 7.3
## தொழில்நிலை

*சதவீதம்*

| காலம் | தொழில்நிலை | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | அரச துறை ஊழியர் | தனியார் துறை ஊழியர் | தொழில் தருநர் | சுய தொழில் | கொடுப்பனவுகளற்ற குடும்ப தொழிலாளர் | மொத்தம் |
| *1990* | 21.5 | 33.7 | 1.8 | 29.2 | 13.8 | 100 |
| *1994* | 16.4 | 44.3 | 2.3 | 27.2 | 9.8 | 100 |
| *1995* | 15.6 | 44.3 | 2.5 | 28.3 | 9.4 | 100 |
| *1996* | 15.0 | 45.8 | 2.3 | 26.8 | 10.0 | 100 |
| *1997* | 15.1 | 44.3 | 2.3 | 28.8 | 9.4 | 100 |
| *1998* | 14.5 | 41.2 | 1.9 | 28.9 | 13.6 | 100 |
| *1999* | 14.4 | 43.1 | 2.0 | 28.3 | 12.2 | 100 |
| *2000(அ)* | 13.4 | 42.9 | 2.4 | 28.4 | 13.0 | 100 |
| *2001(ஆ)* | 13.9 | 44.8 | 2.3 | 28.5 | 10.5 | 100 |
| 1ஆம் காலாண்டு | 14.7 | 43.0 | 2.5 | 29.5 | 10.4 | 100 |
| 2ஆம் காலாண்டு(இ) | வி.கி | வி.கி | வி.கி | வி.கி | வி.கி. | வி.கி |
| 3ஆம் காலாண்டு | 13.0 | 47.8 | 2.2 | 27.0 | 10.0 | 100 |
| 4ஆம் காலாண்டு | 13.9 | 43.5 | 2.3 | 29.1 | 11.2 | 100 |
| 2002(ஆ) | 13.2 | 45.1 | 2.9 | 28.0 | 10.8 | 100 |
| 1ஆம் காலாண்டு | 12.7 | 45.2 | 3.1 | 26.9 | 12.1 | 100 |
| 2ஆம் காலாண்டு | 13.4 | 44.5 | 3.1 | 28.6 | 10.4 | 100 |
| 3ஆம் காலாண்டு | 13.4 | 45.7 | 2.4 | 28.6 | 10.0 | 100 |

*மூலம்: குடிமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்.*

*(அ) நான்கு காலாண்டுகளின் சராசரி*
*(ஆ) மூன்று காலாண்டுகளின் சராசரி*
*(இ) 2001ஆம் ஆண்டு 2ஆம் காலாண்டுக்கான தொழிற்படை அளவீடு குடிமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் நடாத்தப்படவில்லை.*

**அட்டவணை 7.4**
**பொருளாதார நடவடிக்கைகளின்படி தொழில்நிலை**

| காலம் | ஆயிரம் ஆட்களில் | | | | | | | | மொத்த தொழில் நிலையின் சதவீதமாக | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1999 (அ) | 2000 (அ) | 2001(ஆ) | | | 2002 | | | 2001 | 2002 |
| | | | 1 ஆம் காலாண்டு | 3 ஆம் காலாண்டு | 4 ஆம் காலாண்டு | 1 ஆம் காலாண்டு | 2 ஆம் காலாண்டு | 3 ஆம் காலாண்டு | 3 ஆம் காலாண்டு | 3 ஆம் காலாண்டு |
| **வேளாண்மை** | 2,205 | 2,274 | 1,992 | 2,007 | 2,101 | 2,342 | 2,152 | 2,120 | 32.4 | 33.1 |
| **கைத்தொழில்** | 1,332 | 1,491 | 1,474 | 1,554 | 1,445 | 1,422 | 1,313 | 1,355 | 25.1 | 21.1 |
| சுரங்கமகழ்தல் கல்லுடைத்தல்(இ) | 76 | 67 | 101 | 118 | 111 | | | | 1.9 | |
| தயாரிப்பு | 902 | 1,045 | 1,036 | 1,088 | 1,047 | 1,125 | 1,035 | 1,092 | 17.5 | 17.0 |
| கட்டடவாக்கம் | 322 | 348 | 337 | 348 | 287 | 297 | 278 | 263 | 5.6 | 4.1 |
| மின்வலு, வாயு மற்றும் நீர் (ஈ) | 32 | 31 | | | | | | | | |
| **பணிகள்** | | | | | | | | | | |
| வர்த்தகம், உணவகங்கள் முதலியன | 2,546 | 2,545 | 2,746 | 2,641 | 2,747 | 2,898 | 2,865 | 2,934 | 42.6 | 45.8 |
| போக்குவரத்து, களஞ்சியப்படுத்தல் மற்றும் தொடர்பூட்டல் | 736 | 801 | 820 | 738 | 875 | 973 | 928 | 1,012 | 11.9 | 15.8 |
| நிதி காப்புறுதி மற்றும் உண்மைச் சொத்து | 311 | 307 | 412 | 406 | 348 | 282 | 334 | 297 | 6.5 | 4.6 |
| தனிப்பட்ட பணிகள் மற்றும் | 100 | 131 | 138 | 119 | 165 | 153 | 155 | 189 | 1.9 | 2.9 |
| ஏனையவை | 1,399 | 1,307 | 1,376 | 1,378 | 1,359 | 1,490 | 1,448 | 1,436 | 22.2 | 22.4 |
| மொத்தத் தொழில் வாய்ப்பு | 6,083 | 6,310 | 6,212 | 6,202 | 6,293 | 6,662 | 6,330 | 6,409 | 100.1 | 100.0 |
| தொழிற்படையின் சதவீதம் | 91.1 | 92.4 | 92.3 | 92.2 | 91.7 | 91.3 | 90.2 | 90.9 | | |

(அ) நான்கு காலாண்டுகளினதும் சராசரி.
(ஆ) 2001ஆம் ஆண்டு 2ஆம் காலாண்டில் குடிமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தினால் காலாண்டுத் தொழிற்படை அளவீடு நடத்தப்படவில்லை.
(இ) 2002ஆம் ஆண்டு 1ஆம் காலாண்டிலிருந்து சுரங்கமகழ்தல், கல்உடைத்தல் ஆகியன தனிப்பட்ட பணிகளின்கீழும் ஏனையவை காலாண்டுத் தொழிற்படை அளவீட்டின்கீழும் வகைப்படுத்தப்பட்டுள்ளன.
(ஈ) 2001ஆம் ஆண்டு 1ஆம் காலாண்டிலிருந்து மின்வலு, வாயு மற்றும் நீர் ஆகியன தனிப்பட்ட பணிகளின்கீழும் ஏனையவை காலாண்டுத் தொழிற்படை அளவீட்டின்கீழும் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

மூலம்: குடிமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்.

தொழிற்படை அளவீட்டின்படி தொழிற்படையில் உள்ள வேலையிலுள்ளோர் சதவீதம் 2001ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் வீழ்ச்சியடைந்திருந்ததோடு 2002ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் 90.9 சதவீதத்திற்கு அதிகரிக்க முன்பு 2002இன் இரண்டாம் காலாண்டில் 90.2 சதவீதமாக இருந்தது. 2002ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் அனைத்து பொருளாதார நடவடிக்கைகளிலும் முன்னேற்றம் கண்டு வரும் வேளையில் 2002இன் இரண்டாம் காலாண்டு வரை தொழிலிலிருக்கும் தொழிற்படையின் சதவீதம் தொடர்ந்தும் குறைவடைவதோடு 2002இன் மூன்றாம் காலாண்டில் பொருளாதார மீட்சிக்கு காலங்கடந்த தாக்கமாக பதிலிறுக்கத் தொடங்கியது.

2002ஆம் ஆண்டில் அரசதுறைகளின் அத்தியாவசியமான பதவிகளுக்கு மட்டுமே ஆட்சேர்க்கப்படும் என்ற கொள்கைத் திட்டத்தினை தொடர்ந்து 2002 இல் பொதுத் துறையில் தொழில்நிலையின் பங்கு மேலும் வீழ்ச்சியடைந்தது. ஐந்து வகையான தொழில் நிலைகளிடையே, அரசதுறை ஊழியர்கள், கூலி வழங்கப்படாத குடும்ப வேலையாட்கள், மற்றும் தொழில் கொள்வோர் என்பவற்றின் பங்கு முறையே 13 சதவீதம், 10 சதவீதம், மற்றும் 2 சதவீதமாக அமைந்திருந்தது. தனியார் துறை ஊழியர்களின் பங்கு 2001ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டின் 48 சதவீதத்திலிருந்து 2002ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் 46 சதவீதத்திற்கு சிறிதளவால் வீழ்ச்சியடைந்ததோடு இதே காலப்பகுதியில் சுயதொழில் வகை 29 சதவீதத்திற்கு அதிகரித்தது. எதிர்காலத்தில் சிவில் முரண்பாடுகளுக்கு தீர்வு காண்பதற்கான சாதகமான முயற்சிகளுடன் தனியார் துறையின் தொழில்நிலையின் பங்கு அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

2002ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் நிலவிய வேளாண்மைக்கு உறுதுணையான காலநிலைக் காரணிகள் காரணமாக கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் வேளாண்மைத் துறையில் தொழில்நிலை உருவாக்கம் கூடிச்சென்றது. வேளாண்மைத் துறையில் தொழில்நிலையின் சதவீதப் பங்கு 2001 இன் மூன்றாம் காலாண்டின் 32 சதவீதத்திலிருந்து 2002ஆம் ஆண்டுக் காலத்தில் 33 சதவீதத்திற்கு உயர்ந்தது. பெரும்போகம் சார்பளவில் வெற்றிகரமாக அமைந்தமையினால் 2002 ஆம் ஆண்டின் முதலாவது காலாண்டில் வேளாண்மைத்துறையின் ஊழியர்களின் எண்ணிக்கை அதிஉச்சமான 2.3 மில்லியனை அடைந்தது.

### அட்டவணை 7.5
### அரசதுறை தொழில் நிலை

| ஆண்டு | அரச நிறுவனங்கள்(அ) | அரசுசார் நிறுவனங்கள்(ஆ) | மொத்தம் |
|---|---|---|---|
| 1990 | 649,000 | 703,200 | 1,352,200 |
| 1994 | 699,898 | 625,266 | 1,325,164 |
| 1995 | 737,504 | 569,484 | 1,306,988 |
| 1996 | 752,194 | 409,278 | 1,161,472 |
| 1997 | 762,067 | 309,633 | 1,071,700 |
| 1998 | 790,492 | 300,654 | 1,091,146 |
| 1999 | 822,122 | 298,248 | 1,120,370 |
| 2000 | 856,665 | 299,615 | 1,156,280 |
| 2001 | 863,993 | 300,997 | 1,164,990 |
| 2002(இ) | 825,995 | 264,355 | 1,090,350 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

(அ) மத்திய அரசாங்கம், உள்ளூராட்சி மன்றம், மாகாண சபைகள்
(ஆ) அரச கூட்டுத்தாபனங்கள், சட்ட நியதிச் சபைகள், அதிகாரசபைகள் போன்றன.
(இ) புதிய தொடரானது குடிமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட 2002இன் அரச, அரசுசார் துறையின் தொழில் நிலை மதிப்பீடு மற்றும் இலங்கை மத்திய வங்கியினால் நடாத்தப்பட்ட பொதுத்துறை தொழில்நிலைக்கான வருடாந்த அளவீட்டையும் அடிப்படையாகக் கொண்டது.

இதேவேளையில் தொடர்பூட்டல், களஞ்சியம் மற்றும் போக்குவரத்துப் போன்ற துணைத்துறைகள் நீங்கலாக அனைத்து பணிகளும் அதிகரித்து பணிகள் துறையின் தொழில்நிலைப் பங்கு 43 சதவீதத்திலிருந்து 46 சதவீதத்திற்கு உயர்வடைதலை பிரதிபலித்தது. நாடு பூராவும் ஒப்பீட்டு ரீதியில் நிலவிய சமாதான சூழ்நிலை மீட்சியடையும் பணிகள் துறைகளின் நடவடிக்கைகளுக்கு குறிப்பாக உல்லாச பயணத்துறைக்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கியதனால் இத் துறையில் தொழில்வாய்ப்புக்கள் அதிகரித்தன.

2002 ஆண்டுக் காலப்பகுதியில் உலகப் பொருளாதாரத்தின் மெதுவான மீட்சி நிருமாணப் பணிகளின் குறைந்த செயலாற்றம், சுயவிருப்பத்தின் பேரில் ஓய்வு பெற்றுச் செல்லலின் ஊடான தொழில்நிலையின் ஒழுங்கு முறைப்படுத்தல் என்பவற்றை பிரதிபலிக்கும் வகையில் கைத்தொழில் துறையில் தொழில்நிலை வீழ்ச்சியடைந்தது. எவ்வாறாயினும், 2002ஆம் ஆண்டுக் காலத்தில் முதலீட்டுச் சபைக் கம்பனிகளில் வேலைவாய்ப்பு அதிகரித்தது.

தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் நான்கு ஆண்டுக்கொருமுறை நடாத்தப்படும் அரசதுறை மற்றும் அரசுசார் தொழில்நிலை சம்பந்தமான தொகைமதிப்பானது (தொகை மதிப்பு-2002) அரச நிறுவனங்களில் உள்ள ஊழியர்களின் எண்ணிக்கை, அதாவது மத்திய அரசாங்கம் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகளின் ஊழியர்களை உள்ளடக்கிய பாதுகாப்பு படைகளில் பொலிஸ் பணியில் உள்ள கள அலுவலர்களை நீங்கலான ஊழியர்களின் எண்ணிக்கை 637,219 ஆக இருந்ததோடு அரசக் கூட்டுத்தாபனங்கள் சபைகள் மற்றும் அதிகாரசபைகள் என்பவை உள்ளிட்ட அரசுசார் நிறுவனங்களின் ஊழியர்களின் எண்ணிக்கை 272,441 ஆக இருந்தது. இதன்படி ஆயுதப் படைகள் மற்றும் பொலிஸ் பணியில் உள்ள கள அலுவலர்கள் நீங்கலாக மொத்த அரசதுறை ஊழியர்கள் எண்ணிக்கை 2002இல் 909,660 ஆக இருந்ததென தொகை மதிப்பு 2002 பதிவு செய்துள்ளது.

இதேவேளையில் மத்திய வங்கியின் வருடாந்த அரசதுறை தொழில்நிலை அளவீடு 2002 இன் தொகை மதிப்பில் உள்ளடக்கப்பட்ட இரு துறைகளுக்கு மேலதிகமாக ஆயுதப்படைகள் மற்றும் பொலிஸ் பணியில் உள்ள கள அலுவர்களையும் உள்ளடக்கியுள்ளது. தொகைமதிப்பு-2002இற்கு முன்னரான ஆண்டுகளில் வருடாந்த அரசதுறை தொழில்நிலை மொத்த அரச துறை வேலை வாய்ப்புக்களில் சில மிகை மதிப்பீடுகளை கொண்டிருந்ததாக தொகை மதிப்பு 2002 சுட்டிக்காட்டுகின்றது. தொகை மதிப்பு 2002 இனை தொடர்ந்து வருடாந்த அரசதுறை தொழில்நிலை அளவீட்டுத் தொடர்கள் தொகைமதிப்பு 2002 புள்ளி விபரங்களின் படி திருத்தப்பட்டது. இதன்படி 2002 ஆம் ஆண்டில் ஆயுதப்படைகள் மற்றும் பொலிஸ் பணிகளில் உள்ள கள அலுவலர்கள் உள்ளிட்ட அரச மற்றும் அரசசார் நிறுவனங்களின் மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை 1,090,350 என மதிப்பிடப்பட்டுள்ளது. மொத்த அரசதுறை ஊழியர்களில் அரச மற்றும் அரசுசார் ஊழியர்களின் பங்கு முறையே 76 சதவீதமாகவும் 24 சதவீதமாகவும் இருந்தது. இதேவேளை 2002 இற்கு முன்னரான ஆண்டுகளில் அரச துறையிலிருந்த ஊழியர்களின் எண்ணிக்கை வருடாந்த அரசதுறை தொழில்நிலை அளவீட்டிலிருந்து கணக்கிடப்பட்ட தரவுகளின் சதவீத மாற்றங்களை முன்னைய ஆண்டுகளின் மதிப்பிடப்பட்ட அரசதுறை தொழில் நிலைகளுக்கு பிரயோகித்து மதிப்பிடப்பட்டுள்ளது. 2002இல் தொடர்களில் ஏற்பட்டுள்ள முறிவு தொகைமதிப்பு-2002இன் தரவுகள் உள்ளடக்கப்பட்டுள்ளமையை பிரதிபலிக்கின்றது.

வருடாந்த அரசதுறை தொழில் நிலை இந் நாட்டின் 75 சதவீதமான அரச மற்றும் அரச சார்ந்த நிறுவனங்களின் மொத்த எண்ணிக்கையை உள்ளடக்கியிருந்ததுடன் இதனால் அளவீடு செய்யப்பட்ட மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை தொகை மதிப்பு புள்ளிவிபர திணைக்களத்தால் தொகை மதிப்பு 2002இல் உள்ளடக்கப்பட்ட மொத்த ஊழியர்களின் எண்ணிக்கையில் கிட்டத்தட்ட 83 சதவீதமாக இருந்தது. இலங்கை மத்திய வங்கியின் வருடாந்த அரசதுறை தொழில் நிலை அளவீட்டின்படி 2001 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2002 ஆம் ஆண்டில் மொத்த அரசதுறை தொழில்நிலை 0.9 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. இவ்வீழ்ச்சிக்கு அரசு சார்ந்த நிறுவனங்கள் தனித்து பங்காளிப்புச்செய்து 2001 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 5.2 சதவீத வீழ்ச்சியை பதிவு செய்த தொழிலாளர்களின் எண்ணிக்கையை சுயவிருப்பின் பேரில் ஓய்வு பெறச்செய்யும் முறை மூலம் ஊழியர்களின் எண்ணிக்கையை சுருங்கச் செய்தல், அவ்வப்போது வேலையில் அமர்த்தப்பட்ட ஆக்க வளமற்ற அமைய ஊழியர்களை வேலையில் இருந்து நீக்கல், 55 வயதிற்கு மேல் வேலை செய்யும் கால எல்லையை நீடிக்காமல் உரிய காலத்தில் ஓய்வு பெறச் செய்தல் என்பன அரசு சார்ந்த துறைகளில் ஊழியர்களின் எண்ணிக்கையை தொழில்நிலையில் உயர் வீழ்ச்சியை காட்டிய அரசு

### அட்டவணை 7.6
### அரசதுறை தொழில் நிலையில் மாற்றங்கள் (அ)

| | கணிப்பு - 2001 | | | கணிப்பு - 2002 | | | மாற்றம் - 2001/ 2002 | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | கிராமம் | ஏனையவை | மொத்தம் | கிராமம் | ஏனையவை | மொத்தம் | கிராமம் | ஏனையவை | மொத்தம் |
| அரசு | 655,243 | 57,932 | 713,175 | 659,640 | 57,379 | 717,019 | 0.7 | -1.0 | 0.5 |
| நிறைவேற்று | 242,841 | 2,218 | 245,059 | 248,164 | 2,609 | 250,773 | 2.2 | 17.6 | 2.3 |
| நிறைவேற்று அல்லா | 272,092 | 43,914 | 316,006 | 269,921 | 45,051 | 314,972 | -0.8 | 2.6 | -0.3 |
| சிற்றூழியர்கள் | 140,310 | 11,800 | 152,110 | 141,555 | 9,719 | 151,274 | 0.9 | -17.6 | -0.5 |
| அரசுசார் | 210,832 | 16,254 | 227,086 | 201,463 | 13,770 | 215,233 | -4.4 | -15.3 | -5.2 |
| நிறைவேற்று | 28,842 | 2,288 | 31,130 | 29,041 | 2,310 | 31,351 | 0.7 | 1.0 | 0.7 |
| நிறைவேற்று அல்லா | 101,208 | 3,196 | 104,404 | 95,204 | 3,206 | 98,410 | -5.9 | 0.3 | -5.7 |
| சிற்றூழியர்கள் | 80,782 | 10,770 | 91,552 | 77,218 | 8,254 | 85,472 | -4.4 | -23.4 | -6.6 |
| அரசதுறை | 866,075 | 74,186 | 940,261 | 861,103 | 71,149 | 932,252 | -0.6 | -4.1 | -0.9 |
| நிறைவேற்று | 271,683 | 4,506 | 276,189 | 277,205 | 4,919 | 282,124 | 2.0 | 9.2 | 2.1 |
| நிறைவேற்று அல்லா | 373,300 | 47,110 | 420,410 | 365,125 | 48,257 | 413,382 | -2.2 | 2.4 | -1.7 |
| சிற்றூழியர்கள் | 221,092 | 22,570 | 243,662 | 218,773 | 17,973 | 236,746 | -1.0 | -20.4 | -2.8 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

(அ) குடிமதிப்புப் புள்ளி விபரத் திணைக்களத்தினால் 2002இல் நடாத்தப்பட்ட அரச மற்றும் அரசுசார் ஊழியர்களின் தரவுகளை அடிப்படையாகக் கொண்டு அளவிடப்பட்டவாறான மொத்த அரசதுறை தொழில்களில் 83 சதவீதத்தினரின் கணிப்பீட்டினைக் கொண்ட வருடாந்த அரசதுறை ஊழியர்களின் அளவீட்டினை அடிப்படையாகக் கொண்டது.

### அட்டவணை 7.7
### தொழிலற்றோர் வீதம்
### (தொழிற்படையின் சதவீதமாக)

| காலம் | தொடர்பான ஒருவார காலம் | | | | தொடர்பான 12 மாத காலம் |
|---|---|---|---|---|---|
| | ஆண் | பெண் | எல்லோரும் | சம்பளமற்ற குடும்ப வேலையாட்கள்தவிர (அ) | எல்லோரும் |
| 1993 | 9.7 | 21.7 | 13.8 | 15.1 | 17.5 |
| 1994 | 9.7 | 20.1 | 13.1 | 14.3 | 12.9 |
| 1995 | 8.8 | 18.8 | 12.3 | 13.4 | 12.0 |
| 1996 | 8.5 | 18.0 | 11.3 | 12.4 | 11.8 |
| 1997 | 7.7 | 16.1 | 10.5 | 11.5 | 11.6 |
| 1998 | 6.5 | 14.0 | 9.2 | 10.5 | 10.4 |
| 1999 | 6.7 | 13.0 | 8.9 | 10.0 | 9.1 |
| 2000 | 5.8 | 11.1 | 7.6 | 8.6 | 8.2 |
| 2001(ஆ) | 6.2 | 11.4 | 7.9 | 8.8 | 8.2 |
| 1ஆம்காலாண்டு | 5.8 | 11.7 | 7.7 | 8.5 | 7.7 |
| 2ஆம்காலாண்டு(இ) | வி.கி | வி.கி | வி.கி | வி.கி | வி.கி. |
| 3ஆம்காலாண்டு | 6.0 | 11.5 | 7.8 | 8.6 | 8.5 |
| 4ஆம்காலாண்டு | 6.8 | 11.1 | 8.3 | 9.2 | 8.3 |
| 2002(ஆ) | 7.0 | 13.6 | 9.2 | 10.3 | 9.0 |
| 1ஆம்காலாண்டு | 6.5 | 12.8 | 8.7 | 9.8 | 8.5 |
| 2ஆம்காலாண்டு | 7.3 | 14.8 | 9.8 | 10.8 | 9.9 |
| 3ஆம்காலாண்டு | 7.1 | 13.2 | 9.1 | 10.0 | 8.6 |

மூலங்கள்: குடிமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம். இலங்கை மத்திய வங்கி.

(அ) தொழிலிலுள்ள தொழிற்படையிலிருந்து சம்பளமற்ற குடும்ப வேலையாட்களை நீக்குவதன் மூலம் மதிப்பிடப்பட்ட தொழிலின்மை வீதம்.
(ஆ) மூன்று காலாண்டுகளின் சராசரி
(இ) 2001ஆம் ஆண்டு 2ஆம் காலாண்டுக்கான தொழிற்படை அளவீடு குடிமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தினால் நடாத்தப்படவில்லை.

சார்ந்த நிறுவனங்களில் இலங்கை மத்திய வங்கி, இலங்கை துறைமுக அதிகாரசபை என்பன சுயவிருப்பின் பேரில் ஓய்வு பெறச்செய்து தமது ஊழியர்களின் எண்ணிக்கையை குறைத்ததோடு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் என்பன பிரதானமாக அவற்றின் ஆக்க வளமற்ற அமைய தற்காலிக ஊழியர்களை குறைத்தன. மேலும் ஓய்வு பெறும் வயதெல்லையை கடுமையாக பின்பற்றல் மற்றும் தெளிவான நியாயப்படுத்தல்களின்றி தொழிலாளர்களை ஆட்சேர்ப்பதில்லை என்ற தெளிவான கொள்கைத் தீர்மானங்கள் என்பன மூலம் 2002ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் மக்கள் வங்கி அதன் ஊழியர்களின் எண்ணிக்கையை குறிப்பிடத்தக்களவு குறைத்தமை ஒரு சிறந்த உதாரணமாகும். மாகாண பாடசாலைகளுக்கு ஆசிரியர்களை ஆட்சேர்ப்பு செய்தமையினால் 2002 ஆம் ஆண்டில் அரசதுறை நிறுவனங்களின் 0.5 சதவீத சிறிய அதிகரிப்பிற்கு பங்களிப்பு செய்தது. செயற்றிட்டங்களின் முற்றுப்பெறல்களின் காரணமாக நிறுவனங்களின் ஒப்பந்த அடிப்படையில் இணைத்துக் கொள்ளப்பட்ட தொழிலாளர்களின் வேலை முடிவுறுத்தப பட்டமையினால் சில வீழ்ச்சிகளும் ஏற்படலாயின.

அரசதுறைக்கு ஆட்சேர்ப்பதற்கு நியாயமான காரணங்கள் இருந்தால் மாத்திரமே ஊழியர்களை வேலையில் அமர்த்திக் கொள்வது என்ற அரசின் தீர்மானமானது 2001 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 2002ஆம் ஆண்டின் அரசதுறை நிறுவனங்களின் ஊழியர்களின் எண்ணிக்கை 0.9 சதவீத வீழ்ச்சியைப் பிரதிபலிப்பதற்கு காரணமாகியது. 2001 ஆம் ஆண்டின் தொடர்பான மாற்றம் 2000 இனைக் காட்டிலும் 0.8 சதவீத அதிகரிப்பாகும்.

## 7.5 தொழில்வாய்ப்பின்மை

2001ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2002ஆம் ஆண்டுக் காலப்பகுதியின் பொருளாதாரத்தின் மீட்சி புதிய பொருளாதார நடவடிக்கைகளுக்கு வழிவகுத்தது. 2002இல் பெருமளவு தொழில் வாய்ப்புக்களை உருவாக்கியது. 2002ஆம் ஆண்டின் இரண்டாம்

## அட்டவணை 7.8
## வயது அடிப்படையில் தொழிலற்றோர் வீதம் (தொழிற்படையின் வீதம்)

| காலம் | வயதுத் தொகுதியினர் (ஆண்டுகள்) | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | 15-19 | 20-29 | 30-39 | 40-49 | 50உம் அதற்கு மேலும் | எல்லாம் |
| *1993* | 38.4 | 25.2 | 8.4 | 3.3 | 1.5 | 13.8 |
| *1994* | 40.7 | 24.5 | 7.6 | 2.5 | 1.2 | 13.1 |
| *1995* | 37.6 | 22.2 | 8.0 | 2.9 | 0.4 | 12.3 |
| *1996* | 36.5 | 22.0 | 6.0 | 1.9 | 0.5 | 11.3 |
| *1997* | 34.0 | 21.9 | 5.2 | 1.7 | 0.6 | 10.5 |
| *1998* | 27.3 | 19.3 | 4.9 | 2.0 | 0.7 | 9.2 |
| *1999* | 28.4 | 18.9 | 4.4 | 1.6 | 1.0 | 8.9 |
| *2000(அ)* | 23.3 | 17.4 | 3.6 | 1.3 | 0.8 | 7.6 |
| *2001(ஆ)* | 29.8 | 18.4 | 3.4 | 1.0 | | 7.9 |
| 1ஆம் காலாண்டு | 28.5 | 18.1 | 2.9 | 0.7 | | 7.7 |
| 2ஆம் காலாண்டு(இ) | வி.கி | வி.கி | வி.கி | வி.கி | | வி.கி |
| 3ஆம் காலாண்டு | 32.7 | 18.0 | 3.0 | 1.0 | | 7.8 |
| 4ஆம் காலாண்டு | 28.3 | 19.1 | 4.3 | 1.2 | | 8.3 |
| *2002 (ஆ)* | 30.6 | 20.8 | 4.1 | 1.3 | | 9.2 |
| 1ஆம் காலாண்டு | 22.9 | 18.7 | 5.7 | 1.4 | | 8.7 |
| 2ஆம் காலாண்டு | 34.0 | 23.2 | 3.4 | 1.5 | | 9.8 |
| 3ஆம் காலாண்டு | 35.0 | 20.4 | 3.1 | 1.1 | | 9.1 |

மூலம்: குடிமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்.

(அ) நான்கு காலாண்டுகளுக்குமான சராசரி.
(ஆ) மூன்று காலாண்டுக்கான சராசரி
(ஆ) 2001ஆம் ஆண்டு 2ஆம் காலாண்டுக்கான தொழிற்படை அளவீடு குடிமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தினால் நடாத்தப்படவில்லை.

## அட்டவணை 7.9
## கல்வி அடிப்படையில் தொழிலற்றோர் வீதம்
### தொழிற்படையின் சதவீதம்

| காலம் | பாடசாலை செல்லாதோர் | வகுப்பு 0-4 ஆண்டு 1-5 | வகுப்பு 5-9 ஆண்டு 6-10 | க.பொ.த.(சா.த.) பொ.க.தே.சா. | க.பொ.த.(உ.த.) தே.க.பொ.த.ப. மற்றுமதற்கு மேலும் | எல்லாம் |
|---|---|---|---|---|---|---|
| *1993* | 3.1 | 4.9 | 13.7 | 21.3 | 23.3 | 13.8 |
| *1994* | 2.6 | 5.0 | 13.0 | 19.6 | 23.7 | 13.1 |
| *1995* | 1.8 | 3.4 | 12.8 | 18.4 | 20.0 | 12.3 |
| *1996* | 2.8 | 3.4 | 12.2 | 16.4 | 19.0 | 11.3 |
| *1997* | 2.0 | 2.4 | 10.6 | 15.9 | 19.3 | 10.5 |
| *1998* | 1.0 | 2.4 | 9.0 | 13.7 | 17.5 | 9.2 |
| *1999* | 0.4 | 1.9 | 8.2 | 13.6 | 17.9 | 8.9 |
| *2000(அ)* | 1.2 | 1.0 | 7.5 | 11.3 | 14.9 | 7.6 |
| *2001(ஆ)* | 1.3 | | 7.1 | 11.8 | 15.4 | 7.9 |
| 1ஆம் காலாண்டு | 1.3 | | 6.9 | 11.1 | 15.3 | 7.7 |
| 2ஆம் காலாண்டு (ஆ) | வி.கி | | வி.கி | வி.கி | வி.கி | வி.கி |
| 3ஆம் காலாண்டு | 1.6 | | 6.9 | 11.3 | 15.9 | 7.8 |
| 4ஆம் காலாண்டு | 1.1 | | 7.4 | 12.9 | 14.9 | 8.3 |
| *2002(ஆ)* | 2.0 | | 8.2 | 13.5 | 18.1 | 9.2 |
| 1ஆம் காலாண்டு | 2.1 | | 8.0 | 12.0 | 16.7 | 8.7 |
| 2ஆம் காலாண்டு(ஆ) | 1.7 | | 8.1 | 15.3 | 20.3 | 9.8 |
| 3ஆம் காலாண்டு | 2.2 | | 8.4 | 13.1 | 17.3 | 9.1 |

மூலம்: குடிமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்.

(அ) நான்கு காலாண்டுச் சராசரி.
(ஆ) மூன்று காலாண்டுச் சராசரி
(இ) 2001ஆம் ஆண்டு 2ஆம் காலாண்டுக்கான தொழிற்படை அளவீடு குடிமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தினால் நடாத்தப்படவில்லை.

காலாண்டில் தொழில் வாய்ப்பின்மை வீதம் அதன் உச்சமட்டமான 9.8 சதவீதத்திற்கு உயர்ந்து மூன்றாம் காலாண்டில் 9.1 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. சராசரி தொழில் வாய்ப்பின்மை வீதம் 2001 இன் 7.9 சதவீதத்துடன் ஒப்பிடும்போது 2002 இன் முதல் மூன்று காலாண்டுகளிலும் 9.2 சதவீதமாக அமைந்திருந்தது. 2002 இன் பின் அரைப்பகுதியில் பொருளாதார வளர்ச்சி சாதகமான வீதத்தில் தொடர்ந்தமையினால் 2002 இன் இறுதிக் காலாண்டில் தொழில் வாய்ப்பின்மை வீதம் மேலும் குறையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

15-19 வயது மற்றும் 20-29 வயதுத் தொகுதியினரிடையேயான தொழில் வாய்ப்பின்மை வீதம் 30.6 சதவீதமாகவும், 20.8 சதவீதமாகவும் விளங்கியதுடன் க.பொ.த (சா/த) தேர்ச்சி பெற்ற மற்றும் க.பொ.த (உ/த) சித்தி பெற்றவர்களுக்கிடையிலான தொழில்வாய்ப்பின்மை வீதம் 13.5 சதவீதமாகவும், 18.1 சதவீதமாகவும் அமைந்து படித்த இளைஞர்களிடையே தொழில்வாய்ப்பின்மை தொடர்கின்றது என்பதற்கு சிறந்த சான்றாக விளங்கியது. தொடர்ந்து பிரச்சனைக்குரிய விடயமாக இருந்துவரும் கல்வி கற்ற இளைஞர்களின் வேலையில்லாப் பிரச்சினையை தீர்ப்பதற்காக கொள்கை அபிவிருத்தி மற்றும் அமுலாக்கல் அமைச்சு மற்றும் தொழில் மற்றும் வேலை வாய்ப்பு அமைச்சினூடாக அரசாங்கம் பல திட்டங்களை ஏற்படுத்தியுள்ளது.

18 மற்றும் 28 வயதிற்கிடையிலான இளைஞர்களுக்கான கொள்கை அபிவிருத்தி மற்றும் அமுலாக்கல் அமைச்சின் நிகழ்ச்சித் திட்டமான "இளைஞர் பட்டாளம்" 2003 ஆம் ஆண்டின் முதன் அரைப்பகுதியில் தொடங்குவதற்கு உத்தேசிக்கப் பட்டுள்ளது. தொழில் சார்ந்த பயிற்சிகள் சம்பந்தமாக நன்கு திட்டமிடப்பட்ட ஒன்றிணைந்த பொதியானது ஆண் மற்றும் பெண் ஆகிய இருபாலாரினதும் அபிவிருத்தியை குறிக்கோளாகக் கொண்ட இளைஞர் பட்டாளம் என்பதோடு இது ஒரு இராணுவ அமைப்பு அல்ல. ஒன்றிணைந்த பயிற்சிப் பொதியானது தலைமைத்துவ பயிற்சி, ஆங்கிலம், கணனி மற்றும் தகவல் தொழில்நுட்பம், உற்பத்தித்திறன், தொழில் ரீதியான வழிகாட்டல்கள், வாழ்க்கைத்திறன் தொழிற்பயிற்சி மற்றும் தொழில் முயற்சி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்ட நடவடிக்கைகளை உள்ளடக்கியுள்ளது. அமைச்சு அரம்பத்தில் 3000 இளைஞர்களை வேலைக்கமர்த்தி அவர்களை இளைஞர் தலைமைத்துவ அணியாக பயிற்றுவிக்கும். நாட்டின் அனைத்து மாவட்டங்களிலுமுள்ள பிரதேச செயலகங்களை உள்ளடக்கி நிறுவப்படவுள்ள 160 இளைஞர் பட்டாள நிலையங்களில் இவர்கள் தலைவர்களாக நியமிக்கபடவுள்ளனர். ஒவ்வொரு தேர்தல் தொகுதியிலும் குறைந்தது ஒரு இளைஞர் பட்டாள நிலையமாவது

அமைக்கப்படும் என்பதோடு 18-28 வயதிற்கு இடைப்பட்ட பெரும்பாலும் அதேநேரத்தில் தொகுதியிலிருந்து 250 தொழிலற்ற இளைஞர்களுக்கு ஒவ்வொரு நிலையமும் பயிற்சி வழங்குவதோடு இத்திட்டத்தின் கீழான ஆரம்ப உள்வாங்கும் அளவு 40,000 ஆக அமைந்திருக்கும்.

இதேவேளை 2002 ஆம் ஆண்டின் தேசிய தொழில்நிலைக் கொள்கை வரைவில் குறிப்பிட்டுள்ளதைப் போன்று உள்ளூர் தொழில் சந்தை மற்றும் பன்னாட்டு தொழில் சந்தை என்பவற்றிற்கு ஏற்றவகையில் தொழில் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சு வேலையற்ற படித்த இளைஞர்களுக்கு போதுமான பயிற்சி வசதிகளை வழங்கியது. தொழில் மற்றும் தொழில்நிலை அமைச்சினால் நாடு பூராவும் நிறுவுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள தொழில்நிலை சேவை நிலையங்களினூடாக இப்பயிற்சி நிகழ்ச்சி திட்டங்களை நடாத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. முதலாவது தொழில்நிலை நிலையம் 2002 பெப்புருவரியில் மத்துகமவில் நிறுவப்பட்டது. தொழில் தேடுபவர்களுக்கும் தொழில் வழங்குனர்களுக்கும் இச் சேவை நிலையம் வசதியளிக்கும் நிலையமாக தொழிற்படும். தொழில் தேடுபவர்களுக்கு தொழிலாளர் கேள்வி சம்பந்தமான வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கள் பற்றிய அனைத்து தகவல்களையும் வழங்குவதற்கு மேலதிகமாக இச் சேவை நிலையங்களிலிருந்து தனியார் துறைக்கு உள்ளீடுகளை பெறமுடியுமென்று எதிர்பார்க்கப்படுகின்றது. 2002ஆம் ஆண்டிலிருந்து தொழில் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சு வேலையற்ற பட்டதாரிகளுக்கான தருண அருண நிகழ்ச்சித் திட்டத்தினை மேற்பார்வை செய்தல் மற்றும் நிதியிடல் பொறுப்பை ஏற்றுக்கொண்டது. இந்நிகழ்ச்சித் திட்டத்தினால் இதுவரையில் பட்டதாரிகளுக்கு போதுமான பயிற்சிகளை வழங்க முடியாது போனமையால் வேலையற்ற பட்டதாரிகளின் குறிப்பிடத்தக்க அதிகரிப்பிற்கு வழிவகுத்தது. இதற்குப் பரிகாரமாக 2003 இன் முதலரைக் காலப்பகுதியில் தொழில் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சு இந் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நாட்டிலுள்ள கிட்டத்தட்ட 25,000 தொழிலற்ற பட்டதாரிகளிலிருந்து கிட்டத்தட்ட 10,000 பேருக்கு தொழில் வழங்கவுள்ளது. தனியார் துறையினரின் மனிதவள தேவைகளுக்கிடையிலும், அரசினால் நிருவகிக்கப்படுகின்ற பல்கலைக்கழகங்களில் இருந்து வெளியேறும் பட்டதாரிகளின் தகைமைகளுக் கிடையிலும் காணப்படும் இணக்கமின்மையை குறைக்கும் நோக்கில் கணனிப் பயிற்சி மற்றும் ஆங்கில மொழி அறிவு வழங்கல் என்பன இந்நிகழ்ச்சித் திட்டத்தின் பிரதான குறிக்கோளாகும்.

## 7.6 வெளிநாட்டு தொழில்வாய்ப்பு

கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2002 ஆம் ஆண்டுக் காலத்தில் வெளிநாட்டு தொழில்வாய்ப்பு குறிப்பிடத்தக்க அளவு அதிகரித்திருந்தது. இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் படி வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்காக சென்றவர்களின் பதிவு செய்யப்பட்ட எண்ணிக்கை 2001 ஆம் ஆண்டின் 184,000 உடன் ஒப்பிடுகையில் 2002 இல் ஏறத்தாழ 204,000 ஆக அமைந்திருந்தது. 2001 இன் முதலரைப்பகுதியின் வெளிசெல்லலிலான 87,000 உடன் ஒப்பிடுகையில் 2002 இன் முதலரைப்பகுதியில் 90,000 இற்கு சிறிதளவால் அதிகரித்ததோடு 2002 இன் இரண்டாமரைப் பகுதியில் எதிர்பார்க்கப்பட்ட 108,000 இனை விட அதிகமாக இருந்ததுடன் 2001 இன் இரண்டாமரைப் பகுதியின் வெளிச்செல்லல் எண்ணிக்கையான 97,000 உடன் ஒப்பிடுகையில் 2002 இன் இரண்டாமரைப் பகுதியின் 114,000 ஆக அமைந்தது. 2001 யூலையில் வானூர்தி நிலையம் மீதான பயங்கரவாதத் தாக்குதலினால் 2001இன் இறுதியில் வானூர்திப் பயணத்திற்கான அதிகரித்த கேள்வி மற்றும் வானூர்தி வருகைகள் தடங்கலின்றி இருந்தமை என்பன 2002 இன் இரண்டாம் காலப்பகுதியின் உயர் அதிகரிப்புக்கு காரணமாகியது.

வெளிநாடுகளுக்கு தொழில்வாய்ப்பு பெற்றுச்சென்ற மனிதவலு வளங்களுள் வீட்டுப் பணிப்பெண்களின் பங்கு 2002 ஆம் ஆண்டில் 53 சதவீதமாக இருந்தவேளையில், பெண்களின் பங்கும் கிட்டத்தட்ட 65 சதவீதமாக இருந்தது. நாட்டின் பாரிய வெளிநாட்டு செலாவணி உழைக்கும் தனியொருதுறை யாக புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் வெளிநாட்டுப் பணமாற்றல்கள் இருந்தவேளையில் வெளிநாட்டு வேலைவாய்ப்பில் வீட்டுப் பணிப்பெண்களின் பங்கு உயர்ந்தளவில் இருந்தது. வீட்டுப் பணிப்பெண்களில் தங்கியிருத்தலானது மற்றைய நாடுகளிலிருந்து இம் மனித வலுத்துறைக்கு எழுந்துவரும் போட்டி நிலமைகளில் வீட்டுப் பணிப்பெண்களின் தொழில் தரத்தை மேம்படுத்துவதற்கு தேர்ச்சியுள்ள பயிற்சிகள் வழங்கப்படுவதோடு ஏனைய தேர்ச்சி பெற்ற தொழில்களுக்கு தொழில்களுக்கு பன்முகப்படுத்துவது அத்தியாவசியமானதாகக் காணப்படுகின்றது. மத்திய கிழக்கு நாடுகளில் வீட்டு வேலைகளுக்கு பெண்கள் செல்வதற்கிருந்த தடையை வங்காளதேசம் நீக்கியுள்ளமையானது போட்டியை மேலும் அதிகரித்துள்ளது. 2002 ஆம் ஆண்டுக் காலத்தில் வீட்டுப் பணிப்பெண்களின் தேர்ச்சியினை தரமுயர்த்தி அவர்களை மற்றைய தேர்ச்சி பெற்ற தொழில்களில் ஈடுபடுத்தும் நோக்குடன் தொழில் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சு இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்துடன் இணைந்து பன்னாட்டு ரீதியில் அதிக போட்டித்தன்மை கொண்ட தேர்ச்சி பெற்ற பயிற்சி நிலையங்களை வீட்டுப் பணிப்பெண்களுக்கு பயிற்சியளிப்பதற்காக நிறுவியுள்ளது. பயிற்றப்பட்ட தொழிலாளர்களின் வெளிச்செல்லல் 2001 இன் 36,800 இலிருந்து 2002 இல் 45,500 இற்கு, அதிகரித்தமை இந் நடவடிக்கைகளின் செயலாற்றத்திற்கு சிறந்த சான்று என்பதோடு மனித வலுத்துறையில் பயிற்றப்பட்ட தொழிலாளர்களின் பங்கு 2001 இன் 20 சதவீதத்திலிருந்து 2002 இல் 22 சதவீதத்திற்கு அதிகரித்தது.

"புகழ்ந்துணரப்படாத வீரர்கள்" ஆன இப் புலம்பெயர்ந்த தொழிலாளர்களினால் நாட்டுக்கு

## அட்டவணை 7.10
## வெளிநாட்டுத் தொழில் வாய்ப்பு

எண்ணிக்கை (சதவீதம் அடைப்புக்குறிக்குள்)

| விடயம் | 1998 | 1999 | 2000 | 2001 | 2002 (அ) |
|---|---|---|---|---|---|
| தொழிலில் உள்ளோர் | 159,816 | 179,735 | 182,188 | 184,007 | 203,665 |
| மூலத்தின்படி - | | | | | |
| உரிமம் பெற்ற முகவர்கள் | 112,539 | 120,627 | 127,615 | 132,319 | 152,894 |
| | (70) | (67) | (70) | (72) | (75) |
| ஏனையோர் | 47,277 | 59,108 | 54,573 | 51,688 | 50,771 |
| | (30) | (33) | (30) | (28) | (25) |
| பால்வகையின்படி | | | | | |
| ஆணகள் | 53,867 | 63,720 | 59,793 | 59,807 | 70,726 |
| | (34) | (35) | (33) | (33) | (35) |
| பெண்கள் | 105,949 | 116,015 | 122,395 | 124,200 | 132,939 |
| | (66) | (65) | (67) | (67) | (65) |
| மனிதவலுவகை | | | | | |
| வீட்டுப் பணிப்பெண்கள் | 85,349 | 88,066 | 99,413 | 102,853 | 108,475 |
| | (53) | (49) | (55) | (56) | (53) |
| தேர்ச்சி பெற்ற தொழிலாளர்கள் | 31,787 | 37,436 | 36,626 | 36,818 | 45,493 |
| | (20) | (21) | (20) | (20) | (22) |
| தேர்ச்சியற்ற தொழிலாளர்கள் | 34,109 | 43,603 | 35,591 | 33,308 | 36,177 |
| | (21) | (24) | (20) | (18) | (18) |
| ஏனையோர் | 8,571 | 10,630 | 10,558 | 11,028 | 13,520 |
| | (5) | (6) | (6) | (6) | (7) |
| உரிமம் பெற்ற தொழில் முகவர்கள் (ஆண்டு முடிவில்) | 385 | 500 | 445 | 528 | 538 |
| பயிற்சி நிலையங்களின் எண்ணிக்கை | | | | | |
| இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தினால் | 17 | 20 | 21 | 20 | 21 |
| தனியார் முகவர்களினால் | 28 | 29 | 8 | 8 | 8 |

(அ) தற்காலிகமானவை

மூலம்: இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்

ஆற்றப்பட்டுள்ள சேவைகளுக்கு ஈடாக அவர்களின் நன்மை கருதி இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் பல திட்டங்களை அமுல்படுத்தியுள்ளது. அவையாவன பணமாற்றல்கள் மீது வரி அறவிடப்படாமை, புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கான நலன்புரிச் சேவை, மற்றும் அண்மையில் விமான நிலையத்தில் அவர்களுக்காக தனிப்பட்ட மண்டபம் (Lounge) ஒன்று உருவாக்கப் பட்டமை என்பனவாகும். இதற்கு மேலதிகமாக புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் நன்மை கருதி ஏனைய ஏற்பாடுகள் அந்தந்த நாடுகளிலுள்ள இலங்கை தூதுவராலயங்கள் மற்றும் இராஜதந்திர அலுவலகங்களினூடாக ஒழுங்கு செய்யப்பட்டன.

எவ்வாறாயினும், புலம்பெயர்ந்த தொழிலாளர் களின் உரிமைகளை அவர்கள் வேலை செய்யும் இடங்களில் பாதுகாப்பதே இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தினால் எதிர்நோக்கப்படும் மிகப்பெரிய சவாலாகும். ஒருபுறத்தில் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் இந்தப் பிர ச்சினையை முன்னுக்குக் கொண்டுவந்து வேலை வாய்ப்புக்களை இழக்கும் நிலையை தவிர்க்க தன்னாலான சகல முயற்சிகளையும் எடுத்தது. இவ்விடயம் தொடர்பாக தொழிலாளர்களை ஏற்றுக்கொள்ளும் நாடுகள் இலங்கை அரசாங்கத்துடன் இருபுடை உடன்படிக்கைகளை செய்வதற்கு தயங்குகின்றன. மறுபுறத்தில் தற்போது அவர்களது சொந்த நாட்டில் கிடைக்கக்கூடியதாகவுள்ள குறைந்த பொருளாதார வாய்ப்புக்களின் காரணமாக வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களில் முகங்கொடுக்கப்படும் இன்னல்களுக்கு மத்தியிலும் அவர்கள் கிடைக்கக்கூடிய அனைத்து தொழில் வாய்ப்புக்களையும் பயன்படுத்திக் கொண்டனர். கடந்த காலங்களில் புலம்பெயர்ந்த சில தொழிலாளர்களினால் எதிர்நோக்கப்பட்ட துன்பகரமான சம்பவங்கள் போன்றவை ஏற்படுவதை தவிர்க்கும் நோக்கில் அந்நாடுகளுடன் இருபுடை ஒப்பந்தங்களை மேற்கொள்வதனூடாக புலம்பெயர்ந்த ஊழியர்கள் அவர்களது வேலைத்தலங்களில் தொல்லைக்கு உள்ளாக்கப்படுவதைக் குறைக்கும் நோக்கில் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் தலையிடல் நடைமுறைகளை முன்னேற்ற வேண்டிய தேவையுள்ளது.